# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. VI Issue 6 September 2016

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் . . . . . . . . . . . . . . 4

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 10

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 11

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . . 13

பூரணயோகம் - முதல் வாயில்கள் 19

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 21

வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . 23

ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . 27

**The Life Divine – Outline** . . . . . . 30

நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . 34

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 40

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 47

**அன்னை இலக்கியம்**

மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . 49


## ஜீவியத்தின் ஓசை

அஹிம்சை

ஆழ்ந்த

ஹிம்சையின்

அரசியல் ரூபம்.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

**லைப் டிவைன்**
(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 303
Para 8

On that hypothesis, there must be a secret involved Consciousness.
It must be behind the action of the material Energy.

It must be cosmic and infinite.

It must be building up an evolutionary manifestation.

It builds it up through the action of that frontal Energy.

It builds a creation out of itself in the boundless finite of the material universe.
The material Energy is an apparent Inconscience.
That would be an indispensable condition for the structure of the material world-substance.
This Consciousness intends to involve itself in that.

Then it may grow by evolution out of its apparent opposite.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

இக்கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால், ஒரு ஆழ்ந்து மறைந்துள்ள ஜீவியம் இருக்க வேண்டும் என்றாகிறது.
ஜட சக்தியின் செயல்பாட்டின் பின்னால் அது இருக்க வேண்டும்.
அது அண்டத்திற்குரியதாகவும் அனந்தமாகவும் இருக்க வேண்டும்.
அது பரிணாம வெளிப்பாட்டிற்கான அமைப்பை எழுப்புவதாக இருக்க வேண்டும்.
மேற்பரப்பில் செயல்படும் சக்தியின் மூலம் அது அமைப்பை எழுப்புகிறது.
ஜடப் பிரபஞ்சத்தின் எண்ணற்ற சிறிய பொருட்களில் அது தன்னிலிருந்து ஒரு சிருஷ்டியை ஏற்படுத்துகிறது.
ஜடசக்தி இருண்ட ஜடமான தோற்றமுடையது.
உலகத்தில் ஜடப்பொருள் உருவாக இது ஒரு தவிர்க்க முடியாத நிபந்தனையாக இருக்க வேண்டும்.
இந்த ஜீவியம் தான் அதில் ஆழ்ந்து உள்ளடங்க உத்தேசிக்கிறது.
அப்பொழுது, ஆழ்ந்தது அதன் எதிரானதன் மூலம் பரிணாமம் பெற்று வளர முடியும்.

For without some such device a complete involution would be impossible.
If there is such a creation by the Infinite out of itself.

It must be the manifestation, in a material disguise.

It must manifest the truths or powers of its own being.

There would be forms or vehicles of these truths or powers.

They would be the basic fundamental determinates we see in Nature.
The particular determinates are unaccountable variations.

They have emerged from the vague general stuff in which they originate.
They would be the appropriate vehicles of possibilities.
The truths residing in these fundamentals would bear these possibilities within them.
There is an inconscient Chance we are aware of in the workings of Nature.
A free variation of possibilities is natural to an infinite Consciousness.
This would be the explanation of this aspect of inconscient Chance.
It is inconscient only in appearance.
It appears so because of the complete involution in Matter.



ஜட இருள் போன்ற ஒரு கருவியின்றி சிருஷ்டியில் முழுமையாக இறங்கி மறைதல் என்பது சாத்தியமற்றதாகும்.
அனந்தம் தன்னிலிருந்து ஒரு சிருஷ்டியை உருவாக்க எண்ணுகிறது.
அதற்கு அது ஜடத்துள் தான் மறைந்து அதன் மூலம் வெளிப்படுவதாக இருக்க வேண்டும்.
அது வெளிப்படுத்துவது அதன் சத்தியங்கள் அல்லது சக்திகள்.
அதன் சத்தியங்கள் அல்லது சக்திகளுக்கு ரூபங்கள் அல்லது கருவிகள் இருக்க வேண்டும்.
இயற்கையில் நாம் காணும் நிர்ணயங்கள் அவைகளின் நிர்ணயங்களாக இருக்க வேண்டும்.
குறிப்பிட்ட நிர்ணயங்கள் எண்ணற்ற வேறுபாடுகளாக உள்ளன.
அவை அவற்றின் உற்பத்தி ஸ்தானமாக உள்ள, உருத்திட்பமற்ற சாதாரண பொருளிலிருந்து எழும்பியுள்ளன.
அவை சாத்தியங்கள் ஏற்பட தகுந்த கருவிகளாகும்.
இந்த அடிப்படைகளில் வதியும் சத்தியங்கள் இந்த சாத்தியங்களைத் தம்முள் கொண்டுள்ளன.
இயற்கையின் செயல்பாடுகளில் ஆழ்ந்து இருண்ட தற்செயல் நிகழ்வு உள்ளதை நாம் அறிவோம்.
சாத்தியங்களில் சுதந்திரமான வேறுபாடுகளை எழுப்புவது ஒரு அனந்த ஜீவியத்திற்கு இயல்பானது.
ஜட இருளின் தற்செயல் நிகழ்வு எனும் அம்சத்திற்கு இதுவே விளக்கமாகும்.
அது தோற்றத்தில் மட்டுமே இருண்டு ஜடமானது.
ஜடத்தில் ஜீவியம் இறங்கி முழுமையாக மறைந்துள்ளதால் அப்படி அது தோற்றமளிக்கிறது.

It is because of the veil with which the secret Consciousness has disguised its presence.
There is an opposite aspect of a mechanical Necessity.

We see that in Nature.
The real powers of the Infinite are imperatively fulfilling themselves.
This principle would be the explanation for this aspect.
It is mechanical in appearance only.
It so appears because of the same veil of Inconscience.

It would then be perfectly intelligible why the Inconscient does its works.
It does them with a constant principle of mathematical architecture.
It does them with effective arrangement of numbers.

It does them with adaptation of means to ends.

It does them with inexhaustible device and invention.

It has a constant experimental skill and an automatism of purpose.
Consciousness appearing out of an apparent Inconscience would also not be inexplicable.

Contd...



மறைபொருளான ஜீவியம் தன்னை திரைக்குப்பின் ஒளித்துள்ளது.
தவிர்க்க இயலாத இயந்திரத்தன்மையின் செயல்பாட்டிற்கு எதிரான அம்சம் உண்டு.
அதை நாம் இயற்கையில் காண்கிறோம்.
அனந்தத்தின் உண்மையான சக்திகள் தவிர்க்க முடியாத அளவில் தம்மைத்தாமே நிறைவேற்றிக் கொள்கின்றன.
இந்த விதி இந்த எதிரான அம்சத்திற்கான விளக்கம் ஆகும்.
தோற்றத்தில் மட்டுமே அது இயந்திரத் தன்மை கொண்டது.
அதே ஜட இருள் எனும் திரையினால் அது அப்படித் தோற்றமளிக்கிறது.
அதன்பின் ஜட இருள் ஏன் அதன் வேலையைச் செய்கிறது என்பது பூரணமாகத் தெளிவாகும்.
அது அதன் வேலையைக் கணித சாஸ்த்திர கட்டமைப்பு எனும் இடைவிடாத விதியால் நிறைவேற்றுகிறது.
அது எண்களின் வரிசைக் கிரமத்தைச் சிறப்பாக அமைப்பதன் மூலம் அதைச் செய்கிறது.
விளைவுகளுக்கேற்றவாறு வழிவகைகளை மாற்றிக் கொள்ளும் வகையில் அதைச் செய்கிறது.
அதைக் குறையா நிறைவளமுடைய கருவிகளாலும் புதியன புனைதலாலும் நிறைவேற்றுகிறது.
அது இடைவிடாத ஆராய்ச்சித் திறனும் தன்னியக்கமுடைய குறிக்கோளும் உடையது.
ஜீவியம் தோற்றமான ஜட இருளிலிருந்து வெளிவருவதும் விளக்க முடியாததன்று.

தொடரும்...

## இம்மாதச் செய்தி

# அபிப்பிராயம் விலகி அற்புதம் நடப்பதைக் காண்பவர் அன்னையைக் காண்கிறார்.





**Page 188: As he moved in this ether of ambiguous life.**

*இங்கும் அங்குமென இல்லாத ஆகாயத்தினூடே நகர்ந்து*

- ✡ தனக்கே தான் ஒரு புதிரானதைக் கண்டு
- ✡ பிரம்மச் சின்னமாக உலகைக் கண்டு, அவற்றின் அர்த்தத்தைத் தேடி
- ✡ பிறப்பு இறப்பு எனும் நீரோடைகளைத் தாவிக் கடந்து
- ✡ ஆத்ம மாற்றமெனும் மாறும் எல்லைகளைக் கடந்து
- ✡ ஆத்ம சிருஷ்டிப் பாதையில் ஆடும் வேட்டையை மேற்கொண்டு
- ✡ வாழ்வின் வலிய, மென்மையாக பாதைகளைக் கண்டு
- ✡ முத்திரையிட்டு மூடிக் காக்கும் பிரம்மாண்டமான ஆனந்தத்தைத் தொடர்ந்து
- ✡ ஆபத்து நிறைந்த விளையாட்டை முடிவில்லாமல் ஏற்று
- ✡ இப்பெருவழிகளில் எந்த இலட்சியமும் காணாமல்
- ✡ அனைத்தின் அகன்ற மூலத்தை இங்கு கண்டெடுத்து
- ✡ பெரிய மூலத்தைப் பிறிதொரு இடத்தில் நாடி
- ✡ பூமியின் வரிவடிவங்களினின்று அவள் விலகும் பொழுது
- ✡ பிரம்மம் பதட்டமாய் ஈர்த்ததையறிந்து
- ✡ சுதந்திரமான சிந்தனையின் உயர்ந்த சந்தர்ப்பம்
- ✡ அற்புதத்தைக் கண்டெடுக்க அவள் முனைந்தெழுந்தாள்
- ✡ அற்ப கவலைகள் அர்த்தமிழந்து விலகி விடுதலையளித்து
- ✡ ஆசையும் நம்பிக்கையும் வலுவாக உருவகமாகி

✡ இது பெரு நாடகம், உலகைக் கடந்த உன்னதம்

✡ நிரந்தரமாக சுழன்று நெடுதூரத்து ஜோதியை நாடி

✡ சுட்டிக் காட்டியவை வெளிப்பட்டவற்றைவிட பெரியன

✡ பார்வையுடன் கலந்து, விருப்பத்தால் விளங்கி

✡ செயல்படும் சந்தோஷத்தில் காரியத்தை இழந்து

✡ பிரம்மத்தின் பொருளையிழக்கும்வரை மாறி

✡ மின்னும் பூஜ்யமெனும் மாயையென மாறி

✡ மந்திரசக்தி பொருந்திய மாய வில்லென

✡ பார்வையை விட்டகலும் இலக்கை உற்று நோக்கி

✡ அருகிலிருந்தால் தொலைவில் தோன்றி

✡ மிளிரும் பாத்திரங்களை மிடுக்காக உருவாக்கும்

✡ மந்திரச் சுவடியின் மாய இரகஸ்யம் போல்

✡ அவளுடைய சூட்சும சிக்கலான மாயத் திட்டங்களைச் சோதித்து

✡ நிரடான அவள் மறைவான தோற்றங்கள் தரும் அடையாளம்

✡ பாலைவன மணலென பரவும் காலத்தில் வரைந்த

✡ அவள் பெறாத சாதனைகளின் ஆரம்ப அடிகள்

✡ அவள் கரிய செயல்களில் கண்டு கொள்ள முயலும் குறி

## ஜீவிய மணி

*பிறர் நம் மீது பிரியமானால் எரிச்சல் வரும் சுபாவமும் உண்டு. அது தனித்து விலகி தான் செய்வதை எவரும் காணாமல் அனுபவிக்க விரும்பும் மனநிலை.*



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/33. அந்தந்த லோகத்திற்குரிய மௌனம் பூரணமாகாமல் அந்த லோகத்தைக் கடக்க முடியாது. பேசாத மௌனம், சிந்திக்காத மௌனம், புரிந்து கொள்ள விரும்பாத மௌனம், ஜோதியை நாடாத மௌனம், பிரிவை நாடாத மௌனம், அடுத்தடுத்த கட்டத்திற்குரிய நிபந்தனைகள்.**

- மௌனம் பெரியது, சக்தி வாய்ந்தது. சக்தி பார்ப்பவர் அறிய முடியாதது.
- ஒரு மனிதனுடைய படிப்பை, நாணயத்தை, அவனைக் கண்டு அறிய முடியாது.
- மௌனம் உள்ளவர்க்கு மௌன நிலைக்குரியவாறு பிரார்த்தனை பலிக்கும்.
- மனம் பேயாக அலைபவருக்கு மூன்று நாள் பிரார்த்தனை செய்தால் எளிய பிரார்த்தனை பலிக்கும்.
- மௌனம் முதல் நிலையில் உள்ளவர்க்கும் அதே பிரார்த்தனை நினைத்தால் பலிக்கும். அது மௌன சக்தி.
- மௌனம் முடிவான நிலையிலுள்ளவர்க்கு வேகமாக எழும் சூறாவளிப்புயல் நினைவால் அடங்கும்.
- *மௌனம் என்றால் என்ன?*
- மனம் அமைதியானால் அது மௌனம் எனப்படும்.
- மனம் என்பது மனிதன் பெற்ற உயர்ந்த கருவி.
- அதன் திறன் அறிவு, புரிந்து கொள்வது.
- புரிந்து கொள்வது என்றால் என்ன?

- நாயைப் பார்த்து நாய் என அறிவது (fact) விஷயமறிவது.
- நாய் கடிக்கும் என்று அறிவது நாயின் குணத்தை அறிவது.
- நாய் கடிக்கும், ஆனால் தானே கடிக்காது, நாம் நாயை அடித்தால் கடிக்கும் என்று புரிவது நாயால் நமக்கு ஏற்படும் தொந்தரவை அறிவது.
- நாய் நன்றியுடையது என்று அறிவது நாயின் நல்ல குணத்தை அறிவது.
- நாய் கடிக்கும், நன்றியும் உடையது, எதுவும் நம்மைப் பொறுத்தது என்று புரிவது நாய்க்கும் நமக்கும் உள்ள தொடர்பை அறிவது.
- இந்த அறிவு தானே உடனே வருவதில்லை. அனுபவத்தால் வருவது. ஒரு முறை கடித்தால் புரியும்.
- *மனித மனம் பெற்ற அறிவு அனுபவத்தால் பல நாளில் பெற்ற அறிவு.*
- நாய் கடித்தால் மனிதன் சிந்திக்கின்றான். சிந்தனை புரிய வைக்கிறது.
- முனிவர் மனம் மௌனமானது. அது சிந்தனையைக் கடந்தது. மனிதனுக்கு சிந்தனையால் புரிவது முனிவர்க்கு சிந்தனையின்றி புரியும்.
- பத்ரகிரியார் மனைவியின் துரோகத்தை பட்டினத்தாரிடம் சொல்லிய பொழுது முதலில் தான் பார்த்தவுடன் அவள் துரோகம் செய்பவள் எனத் தான் புரிந்து கொண்டதாகக் கூறினார்.
- ரிஷிக்கு சிந்தனையில்லாமல், பார்த்தவுடன் அவள் ஆத்மா தெரியும்.
  அதில் கறுப்பு தெரியும்.
- யோகியிடம் அவள் பெயரைச் சொன்னால் *அவள் நடத்தை கெட்டவள்* என்பார்.



- கடவுளிடம் அவளைப்பற்றிக் கூறினால், அவளால் பாதிக்கப்படாத திறமையைத் தருவார்.
- அவள் சத்திய ஜீவிய ஒளி முன் வந்தால், அவளிடம் உள்ள கறுப்பு மாறி விடும்.
- ஒவ்வொரு நிலைக்கும் மௌனம் உண்டு, சக்தியுண்டு, கருணையுண்டு, அருளுண்டு.
- அன்னையிடம் வருபவர் மனித நிலையிலும், மேற்பட்ட, கீழ்ப்பட்ட நிலைகட்கும் உரியவர்.
- மனித நிலைக்கு மேற்பட்டவர் வந்தால், அவர் நிலைக்குரிய மௌனம் வரும்.
- கீழ்ப்பட்டவர் வந்தால் அதற்குரிய மௌனம் வரும்.
- அவர் விரும்பினால், அந்நிலை உயரும்.
- கயவன் வந்தால், அவன் கயமை கரையும்.
- நமக்குரிய மௌன நிலை எது என அறிய நமக்கு எது பலிக்கிறது என்று கண்டால் நிலை புரியும்.
- படிப்பது சிரமமானது புரிந்தால், அறிவிற்குரிய மௌனம் உண்டு.
- செய்யும் காரியம் கூடி வந்தால் காரியத்தின் நிலைக்குரிய மௌனம் உண்டு.
- சமாளிக்க முடியாத நிலையில் எவரும் கைவிட்ட விஷயம் அன்பர் சமர்ப்பணத்தால் பூர்த்தியானால் அவர் சராசரிக்கு மேற்பட்ட மனிதன் என அறிகிறோம்.
- மௌன சக்தி, வாழ்விலும், அறிவிலும், செயலிலும், உயர்ந்த நிலையிலும், உள்ள நிலையிலும், எந்த நிலையிலும் பலிக்கும். *பலிக்கும் நிலையை அன்பர் முயற்சியால் உயர்த்தலாம்.*
- உடை, உணவு, வீடு, உதவி, ஊர், வாகனம் போன்றவை ஆயிரம். ஒவ்வொன்றிலும் 100-க்கு மேற்பட்ட நிலைகள்

உண்டு. *அது எல்லாவற்றிற்கும் உண்டு*. மௌனத்திற்கும் உண்டு. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டம் போக **B.A.** பட்டம் பெற்றவன் **M.A.** பட்டம் பெற முயல்வது போன்ற முயற்சி வேண்டும். *நிலைகளை அறிவது அவசியம். அவற்றைக் கடக்கும் முறைகளையும் பவரையும் அறிவதும் அவசியம்*. இந்தத் தலைப்பை விளக்கி ஒரு பெரு நூலே எழுதலாம். பிறர் மனத்தை அறிய மௌனம் தேவை. பிறரை நாம் விரும்பும்படி நடக்க வைக்க வேண்டியது பெரிய மௌனம். பகவான் ஹிட்லரை அழிக்க சர்ச்சிலுக்குப் பலத்தை அனுப்ப உதவிய மௌனம் பலமானது. அஹிம்சை ஹிம்ஸைக்கு எதிரானது. ஹிம்ஸையை விலக்கி அஹிம்சையால் ஒரு காரியத்தை சாதிக்க முயன்றால் ஹிம்ஸை குறுக்கிடும். அந்த ஹிம்ஸையை அடக்க உபயோகப்படும் அஹிம்ஸையை செயல்படுத்த வேண்டிய மௌனம் வேறு. தன்னைக் கடத்திச் செல்ல முயன்ற மேயரை அவர் மைத்துனனே சுட வைத்ததும் மௌன சக்தி. அது அதற்குரிய நிலையையுடையது. சென்னையிலிருந்து திருச்சி போகும் ரயிலும் மதுரையிலிருந்து சென்னைக்குப் போகும் ரயிலும் என்றும் தஞ்சாவூரில் சந்திப்பதில்லை. கோமதியின் காதலன் அவளுக்காக டிரைவர் வேலை செய்யும் பொழுது அவன் தகப்பனார் ஜமீன்தார் மதுரையிலிருந்து விஷயம் தெரியாமல் ஆத்திரமாக தஞ்சாவூர் வந்தபொழுது அந்தச் செய்தி அவர் காதில் விழும்படிச் செய்ய ஒரு மௌனம் வேலை செய்தது. *செய்தி ஜமீன்தார் காதில் விழுந்தது*. கொதித்தெழுந்தார். தோற்ற கேஸ் ஜமீன் அவரை வந்தடைய, கோமதியை ரங்கராஜன் மணக்க அவர் நேரடியாகப் போய் ஏற்பாடு செய்தார். இதைச் செய்த மௌனம் சாதிக்கும் மௌனம். *எல்லாச் செயல்கட்கும் பின்னால் அதற்குரிய மௌனம் உண்டு*. மௌனம் என்றால் என்ன? சப்தமின்றி இருப்பது மௌனம். அசைவின்றி இருப்பது மௌனம். உலகம் ஆத்மா **(Spirit)** எடுத்த ரூபம். ஆத்மாவின் அம்சங்கள் 12. அவை: மௌனம், சாந்தி, சத்தியம், ஐக்கியம், ஞானம், உறுதி, அழகு, சந்தோஷம், அன்பு, அனந்தம், சாஸ்வதம், ஜீவன். மேடைப்



பேச்சை நாம் சப்தமாக அறியலாம். மௌனமாகவும் அறியலாம். ஒரு கட்சி ஒரு கொள்கையை ஏற்கும்முன் உள்ள மௌனம் அக்கொள்கையாக உருவாகி, அது ஒரு பேச்சாளனுடைய பேச்சாகிறது. இந்தப் பேச்சிற்கு மேற்கூறிய 12 அம்சங்களுண்டு. நாம் இங்கு மௌனம் என்ற கோணத்திலிருந்து மட்டும் கருதுகிறோம். எல்லாக் கோணங்களிலிருந்தும் காண முடிவது பூரணயோக ஞானம். ஒரு பெண்ணுக்கு நடக்கும் திருமணமும், ஒரு இளைஞன் பெறும் வேலையையும் அவரவர் கோணத்திலிருந்து மட்டும் கருதுகிறோம். எல்லாக் கோணங்களிலிருந்தும் காண முடிவது பூரண யோக ஞானம். ஒரு பெண்ணுக்கு நடக்கும் திருமணமும், ஒரு இளைஞன் பெறும் வேலையையும் அவரவர் அவர் கோணத்திலறிந்தாலும் இந்த 12 அம்சங்களும் அதனுள் பொருந்தியுள்ளன. *இந்தியா ஆகஸ்ட் 15, 1947-இல் சுதந்திரம் பெற்றது என்பது ஒரு நிகழ்ச்சி. இதை அரசியல் நிகழ்ச்சியாக மட்டும் உலகம் அறியும். நாமும் அப்படியே அறிவோம்*. இதற்கும் இந்த 12 அம்சங்கள் உண்டு. மனிதனுக்குப் புரிவது என்பது மனம் அறிவது. மனம் நம் ஜீவனில் நான்கில் ஒரு பகுதி. மெஜாரிட்டி ஓட்டு பெற்றவன் எலக்ஷனில் வென்றான் என்பது அனைவருக்கும் புரிகிறது. இதைப் புரிந்து கொள்பவர்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ளலாம். ஒருவர் எலக்ஷனில் நின்றால் வெற்றி பெற இந்த அறிவு பயன்படாது. தனக்கு மெஜாரிட்டி ஓட்டு வந்து ஜெயித்தால் இந்த சட்டம் செயல்படுபவரை அறியலாம். தனக்கு வந்த ஓட்டு மெஜாரிட்டியில்லை எனில் அதனால் தோற்றோம் என்பதை இது விளக்கும். *அறிவு உள்ளதை விளக்க உதவும். பெறவேண்டியதைப் பெற உதவாது*. மெஜாரிட்டி வந்தால்தான் ஜெயிக்கலாம் என்ற அறிவு மெஜாரிட்டி பெற உற்சாகம் தரும். மெஜாரிட்டியைத் தாராது. **Sensation** உடல் உணர்வு அதை — மெஜாரிட்டி ஜெயிக்கும் — உணரும்பொழுது மெஜாரிட்டி பெறும் திறனைக் கொடுக்கும். மெஜாரிட்டி வரும். இவை மனம் பெறும் அறிவு, நெஞ்சு பெறும் அறிவு, உடலுணர்வு பெறும்

அறிவை வேறுபடுத்தி விளக்கும். இதைக் கடந்த முதல் நிலையுண்டு. மெஜாரிட்டி என்பது ஒரு விஷயம். அது யாரிடம் போக வேண்டும் என முடிவு செய்கிறதோ அவரிடம் போகும். இந்த நிலைகட்கு எல்லாம் உரிய மௌனம் உண்டு. மௌனமும் சமர்ப்பணமும் இணைந்தவை. அதே போல் மௌனம் இந்த 12 அம்சங்களுடனும் இணைந்தவை. இவை நம்முள் பொறுமையாக எழும். நம் வழக்கில் ஒருவரை நாம் கணிக்கும்பொழுது இக்குணங்கள் சேர்ந்து செயல்படுவதை பக்குவம் என்கிறோம். சொல் எதுவானாலும், சொல்பவர் யாரானாலும், சொல்லும் விஷயம் எதுவானாலும், எது எப்படியிருந்தாலும் இவற்றை முழுமையாகத் தழுவும் சமர்ப்பணம் உண்டு. அதற்கு அத்தனையும் கட்டுப்படும். அதே போல் எல்லா அம்சங்களும் — உதாரணமாக மௌனம் — செயல்படும் என்றாலும் அது சிரமம். சமர்ப்பணம் சிரமத்தை விலக்கி காரியத்தை முடிக்கும். எல்லா அம்சங்களும் இணைந்து முழுமையாக மாறி செயல்படுவது திருவுருமாற்றம். அம்சம் பலவானாலும் அவை பின்னணியில் இணைவதே முக்கியம். இணையுமிடத்துச் செயல் சமர்ப்பணம். முழுமையாக இணையுமிடம் செயல்படுவது திருவுருமாற்றம்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேதம் போற்றுவது அக்னி.

கீதையின் கரு அன்பாக உருவாகும் சரணாகதி.

தழலே ஆர்வமான தண்ணொளி ஸ்ரீ அரவிந்தர்.

தவம் தந்த வேகம் பொறுமையால் தண்ணொளியானது யோகம்.

அக்னியின் வேகம் அமைதியின் இனிமை பெற்றது யோகம்.

அக்னி குளிர் நிலவாவது மனிதன் தெய்வமாவது.

உள்ளம் உயர்வது மனம் குளிர்வது.



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

## 128. விரயம் வருமானம் - ஆலை அழுக்கு

- சர்க்கரை ஆலைகளின் கரும்பு சக்கை அழுக்காக வெளிவரும். இது ஆயிரக்கணக்கான டன்களாக வருஷாவருஷம் வரும். கொட்டி வைக்க இடமில்லை. பிரச்சனை.
- **இது நிலத்திற்கு சிறந்த உரம் எனக் கண்டுபிடித்த பொழுது, அது பெரும் வருமானமாயிற்று.**
- வாழ்வில் விரயமில்லை என்ற தத்துவம் இதன் மூலம் ஓர் அம்சத்தில் வெளிவருகிறது.
- அன்னையே முன்நின்று சொத்து கைமாறிய பொழுது, பணம் போட்ட முதலாளி பேங்கில் பணம் பெறும் உரிமையை எதிரிக்குத் தரவில்லை. சமர்ப்பணத்தால் எதிரியான அன்பர் பெற்ற பொழுது அன்பர் உரிமையால் பெறுவதைப்போல் இருமடங்கு திரும்பிக் கேட்கும் உரிமையின்றிப் பெற்றார்.
- **விரயம் வினோதமான பெரும் இலாபம்.**
- தீண்டாமை இந்தியாவில் மட்டும் காணப்படுகிறது என்று உலகம் கூறுகிறது.
- நம் நாட்டில் ஜாதிக்குப் புறம்பானவன் என்பதுபோல் எல்லா நாடுகளிலும் சமூக அந்தஸ்திற்குப் புறம்பானவர்கள் பாதி மக்கட்தொகை. ஆனால் தீட்டு என்பதில்லை.
- ஐரோப்பாவில் அதிகமான இந்நிலை (serfdom) அமெரிக்காவில் மிகக் குறைவு.
- ஐரோப்பிய “தீண்டாமை” அமெரிக்க சம உரிமையானது, அமெரிக்கா இன்று பெற்ற செல்வத்திற்கு முதற்காரணம்.
- பகவான் புதுவைக்கு வந்தபொழுது 16% தீண்டாதவர். தற்சமயம் 25%.
- தீண்டாமை உலகில் இல்லை எனினும் அதன் அடிப்படை இல்லாத இடமில்லை.
- 4 வர்ணங்களைக் கண்ட இந்திய சமூகம் ஆன்மிகத்தில் சச்சிதானந்தத்தைக் கண்டது.

- பகவான் கூறும் பெரிய உண்மையான சச்சிதானந்தத்தில் இது பகுதி.
- சமூகத்தை துறப்பது இந்திய ஆன்மிக மரபு.
- வர்ணாசிரமம் ஏற்பட்ட பொழுது இந்தியர் சமூகத்தை முழுமையாக அறிந்ததாக நினைத்தனர்.
- விரயமில்லை என்ற பகவான் தத்துவம் நாம் ‘விரயம்’ எனக் கூறுவதை சமூகத்தின் உயர்ந்த பகுதியாகக் கருதுகிறது.
- சமூகத்தின் முழுமை மனிதன் ஏற்படுத்திய எல்லைக்குள்ளில்லை. வர்ணாசிரம தர்மம் எல்லையை ஏற்படுத்தினால் *‘சமூகம்’ எல்லைக்கு வெளியே இன்று 25% வளர்ந்துள்ளது.*
- அமெரிக்கா எல்லைக்கு வெளியே வளர்ந்து உலகை ஆள்கிறது.
- இந்தியாவில் S.C. எனப்படுபவரிலிருந்து மனிதகுல மாணிக்கங்கள் எழுந்து உலகையாளும் என்று தத்துவம் சுட்டிக் காட்டுகிறது.
- வரும் தலைமுறைகள் பரம்பரையை அழித்து புதிய தலைமையை ஏற்படுத்துவதும் அந்தச் சமூகம்.
- விரயத்தைத் தவிர்த்து செயல்பட செயல் சிறப்பாக, செம்மையாக இருக்க வேண்டும்.
- ஷெர்லக்ஹோம்ஸ் கதைகளில் சிக்கல்கள் அவிழ்வது இதுபோன்ற ‘விரயம்’ என்ற அம்சத்தால் என்பதைக் காட்டுவதால் அவை நேரடி ஞானம் எழும் கதைகளாம்.
- இராமாயணத்தில் பொய்மான் தெரியாததும், பாரதத்தில் துரியோதனன் பரமாத்மாவுக்குக் கட்டுப்படாததும் மனிதன் தேடும் “தீர்வு விரயத்திலிருப்பதைக் காட்டுகிறது.”
- **உலகப் போருக்குப்பின் ‘விரயமான’ அமெரிக்கா உலகை ஆள்வது அந்த அம்சம்.**
- நாம் உலகத்தின் சிறப்பை விரயம் எனக் கூறுகிறோம்.



## அஜெண்டா

## Censor - எச்சரிக்கை.

- ஓடும் எண்ணங்களை தியானத்தில் நிறுத்தலாம். மற்ற நேரங்களில் நிறுத்த முடியாது. நிறுத்த முயன்றால் எண்ணம் பீறிட்டெழும். இது எண்ணமாகவோ, எதிர்ப்பாகவோ, குறையாகவோ, நிறையாகவோ, குறைவின் நிறைவு, நிறைவின் குறைவாகவோ எழும்.
- *இதை பகவான் எச்சரிக்கை என்கிறார்.*
- மௌனம் நிலைக்க எச்சரிக்கை அழிய வேண்டும்.
- திருடனைப் பிடிக்கப் போனால் அவன் ஓடுவான். பிடிபடும் திருடனும் உண்டு.
- திருட்டுப் பொருளுடன் அவனை முதலாளியிடம் நிறுத்தினால் அடி விழும்.
- அடி விழாமல் விடுதலையும் கிடைக்கும்.
- மன்னித்துப் போ! என முதலாளி கூறியபின் 3 மணி அங்கேயிருந்த திருடனைக் கண்டு வியந்து “ஏன் நிற்கிறாய்?” எனக் கேட்ட முதலாளிக்கு அவன் திருட்டுப் பொருளை சுட்டிக் காட்டினான். அதைக் கொடுத்தால் போவேன் என்பது பொருள். *இது எச்சரிக்கை.*
- *நம் மனத்தில் திருடு உள்ளவரை திருடன் வரத் தவற மாட்டான் எனக் காட்டும் எச்சரிக்கையிது.*
- எண்ணமே எச்சரிக்கையானால் மௌனம் அருகில் வந்ததைக் காட்டும்.
- திருடன் வருகிறான் எனில் வருமானம் அதிகரிப்பதைக் காட்டுகிறது.
- மௌனம் வந்ததை எச்சரிக்கை அழிவது காட்டும்.
- பூரண யோகம் அகந்தை அழியும் யோகம்.
- இதன் கருவி சமர்ப்பணம்.

- சமர்ப்பணம் பெரு அளவில் பலிக்கும்பொழுது ஒரு சமயம் பலிக்காவிட்டால் அன்பர் "என் சமர்ப்பணம் தவறாது" என அகந்தையை வெளிப்படுத்துவார்.
- தன் அகந்தை அழிந்தபின் பிறர் அகந்தைக்கு உதவினால் அகந்தை அங்கு அழியாமலிருக்கும். பிரபஞ்ச அகந்தைக்கு உதவுவதும் சரிவராது.
- பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்திலும் அகந்தை பர்சனாலிட்டி மூலம் வரும்.
- அதையும் எச்சரிக்கை காட்டும்.
- நீக்ரோ அடிமையொழிய வேண்டும் என்ற பொழுது அவனை மனிதனாகச் சமமாக நடத்த வேண்டும் என நினைத்தால் சட்டம் வந்த பிறகும் சமத்துவம் வராது. அது செய்தவரின் அகந்தை கடைசி கட்டத்தில் — பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்தில் — உயிரோடு இருப்பதைக் காட்டும். இதைக் காட்டுவது எச்சரிக்கை.
- கொடுப்பவர் கொடுத்ததை மறப்பது அழகு என்பது அகந்தை அழிவதைக் குறிக்கும்.
- வலது கை கொடுப்பதை இடது கை அறியாது எனவும் இதைக் கூறுவர்.
- வாசுகி கடைசிவரை சும்மா இருந்தவர் மனம் உயிர் பிரியும் நேரம் "ஏன்" என நினைத்ததும் வள்ளுவர் கூறிய பதிலும் அகந்தை அழிய மறுக்கும் தன்மையைக் காட்டும்.
- அன்னை இச்சக்திகளை **gentleman** என்பார்.
- "நான் அவர்களை வரவேற்பேன்" என்கிறார்.
- வரவேற்கும் மனநிலை அகந்தை எல்லா நிலைகளிலும் அழிந்த மன நிலை.
- கரோலின் பெம்பெர்லியில் விக்காம் பெயரைக் கிளப்பியது எலிசபெத் மனத்தில் அவனிருப்பதைக் காட்டுகிறது. அதையும் **Life Response** என்போம்.

○❖○



## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**21(A).** நம்மை யாரேனும் உதவி கேட்டால் நம் சக்திக்குட்பட்ட அளவுதான் உதவி செய்ய முன்வர வேண்டும்.

நம் சக்திக்கு மீறிய உதவியை ஒத்துக் கொண்டால் அது நமக்கே சிரமமாகி விடும்.

இக்கருத்து உலக வழக்குக்குட்பட்டது. அது அன்னைக்குப் பொருந்தும். நம் சக்திக்கு மீறிய உதவியைச் செய்ய முன்வருவது 1) அறிவீனமான நல்லெண்ணத்தால், 2) யோசனையற்ற நல்லெண்ணெத்தால், 3) பெருமைக்குச் செய்வது, 4) எதையும் நினைக்காமல் செய்வது **(unconscious)**. எப்படிச் செய்தாலும் இரண்டு நடக்கும். 1) முடிவில் அன்பருக்குத் தொந்தரவு வராது, நல்லதே வரும், 2) *செய்த காரியம் திரும்ப வரும்,*

காரியம் சக்தியுள்ளது என்றாலும் சமர்ப்பணம் அதைக் கடந்த நிலையில் அதையும் தவிர்க்கும்.

நம்மால் பிறருக்கு அறியாமல் தொந்தரவு வந்தால் அந்த தொந்தரவு நமக்கு பிறகு வரும். நமக்கு வேண்டுமென்றே தொந்தரவு செய்து நாம் அதிலிருந்து விலகியிருந்து அல்லது தெரியாமலிருந்தாலும் பிறகு நமக்கு வராமலிருக்காது. **(Sincerity)** *உண்மை தெரியாத சிரமத்தையும் தவிர்க்கும். திருவுருமாறி நல்லது செய்யும். நல்லது கெட்டதை விலக்கி யோகப் பலன் தரும்.* அன்பர் சமர்ப்பணம் மூன்று அல்லது பல்வேறு நிலைகளிலிருக்கும். பலன் சமர்ப்பணத்திற்குத் தகுந்தாற் போலெழும். அவை

1) பிரச்சனை தீர சமர்ப்பணம் செய்தால் பிரச்சனை தீரும்.
2) பிரச்சனையை வாய்ப்பாக மாற்ற சமர்ப்பணம் செய்தால் வாய்ப்பு வரும்.

3) *பிரச்சனை வாய்ப்பு என்ற செயல் நிலைகளைக் கடந்த முழு சமர்ப்பணமானால் பலன் செயலாக எழாது. ஜீவியமாக அதே க்ஷணம் எழும்.*

உதவி என்பது ஒரு செயல். அதைச் செய்யும் மனப்பான்மையுண்டு. மனப்பான்மை செய்பவருக்குண்டு, பெறுபவருக்குண்டு, அந்த நிகழ்ச்சிக்குண்டு, காலம், இடத்திற்குண்டு. சட்டங்கள் ஏராளம். சட்டங்களைக் கடந்த நிலைகளும் உண்டு. இன்னும் சட்டமே செயல்படாது (**unconscious stage of darkness**) இருண்ட கண் மூடிய நிலையுண்டு. கீழ்க்கண்டவை இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருந்தும்.

— சட்டம் (**substance**) பொருளால் நிர்ணயிக்கப்படும்.
— மனநிலையால் (3 நிலையில் - மேலே, கீழே, இடையே) நிர்ணயிக்கப்படும்.
— எதிரெதிரான நிலைகளால் எதிரெதிரான சட்டம் செயல்படும்.
— எந்த நிலையிலும் சட்டம் செயல்படுவதை (**Sincerity**) உண்மை நிர்ணயிக்கும்.
— தவறு செய்யலாம், வேண்டுமென்று செய்யலாம், அறியாமல் செய்யலாம், செய்தவற்றை சமர்ப்பணத்தால் நிவர்த்தி செய்யலாம். செய்த பலனை அனுபவிக்கலாம், பலன் எழுந்தபின் பலனை எப்படியும் மாற்றலாம்.

*ஒரு கட்டத்தில் எல்லாம் அன்பர் கையில் உள்ளது.*
அடுத்த கட்டத்தில் எல்லாம் அன்னை கையில் உள்ளது.
அதையும் கடந்த காலத்தின் கையிலும், அதைக் கடந்த (**transcendental plane**) பிரம்மத்தின் கையிலும் உண்டு.

பகவான் கடந்த நிகழ்ச்சிகளை மாற்றலாம் எனவும் கூறியுள்ளார்.

செயலுக்கு மனிதன் கட்டுப்பட்ட நிலையுண்டு.

மனிதனுக்குச் செயல் கட்டுப்பட்ட நேரம் உண்டு.

எதிர்பார்த்து எதிராக நடப்பதுண்டு.



எது நடந்தாலும் அதையும் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம்.

இவை அனைத்தையும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

எல்லா உதாரணங்களையும் **Pride and Prejudice** மூலம் தரலாம்.

உதாரணமின்றி வெறும் தத்துவமாகக் கூறலாம்.

தத்துவத்தை உதாரணம் மூலமும் உதாரணத்தை தத்துவம் மூலமும் கூறலாம்.

எதையும் செய்து விட்டு நாமறியாத நிலையில் பராமுகமாக இருக்கலாம்.

இவற்றிற்கு ஜட உலகப் பலன் வேறு.

இதே நிகழ்ச்சிகட்கு சூட்சும உலகப் பலன் மாறி வரும்.

சத்திய ஜீவிய உலகின் பலன் அறிவைக் கடந்தது.

*பலன் வந்தபின் எந்த சட்டம் எப்படிச் செயல்பட்டது என ஆராயலாம்.*

அடிப்படையில் மனமும், ஆன்மாவும், அதனடியில் பிரம்மமும் (**Self**) அன்னைக்குக் கட்டுப்பட்டிருப்பது அன்பராலும் முடியும், யோகம் செய்யும் சாதகராலும் முடியும்.

எது எவரையும் முழுவதும் அழித்து விடுமோ அதனுள் நுழைந்து அடிபடாமல் வர முடியும்.

பின் வரும் பலன் கர்மத்தை மாற்றுவது, அறியாமையை விலக்குவது, அறியாமையை அறிவாக மாற்றிச் செயல்பட்டு, பலன் தருவது, **horizontal** பக்கவாட்டில் அகன்று உலகுக்குப் பலன் தருவது, உயர்ந்து ஜீவியத்தில் பலன் எழுப்புவது (**consciousness result**), செய்த காரியத்தால் ஜீவியத்தை உற்பத்தி செய்வது, (**creative consciousness**) சிருஷ்டித் திறனுள்ள ஜீவியத்தை உற்பத்தி செய்வது, இவை அனைத்தும் நாமறிந்தும், நாமறியாமலும், அன்னையறிந்தும், அன்னையே அறியாமலும் பலன்களை எழுப்புவதும், பலனேயில்லாமல் பலனைக் கடந்த லோகத்தை அடைவதும் நடக்கின்றன.

— தியோன் மின்னலைத் திசை திருப்பினார்.

— அவர் மனைவி செருப்பை வந்து காலில் மாட்டிக் கொள்ள உத்தரவிட்டார்.

— பகவானுடன் பழகியவர் ஆங்கிலப் பெரு எழுத்தாளர்களை விடச் சிறந்த ஆங்கிலம் எழுதினார்கள். அந்தச் சிறப்பை எவரும் அறியவில்லை. எழுதியவர்களே அறியவில்லை.

— பிரெஞ்சும், ஸ்பானிஷும் உலக மொழியாகி விட்ட நிலையில் பகவான் ஆங்கிலத்தில் எழுதியதால்,

- இன்று ஆங்கிலம் உலக மொழியாகி வருகிறது.
- இந்தியாவில் ஆங்கிலம் பொது மொழியாகி வருகிறது.
- அவர் எழுதிய ஆங்கிலத்தின் சிறப்பை 90 ஆண்டுகளாக ஆங்கிலப் பேராசிரியர்கள் அறிந்ததாகத் தெரியவில்லை.
- காவியமே உலகில் அழிந்தபின் தனக்குத் தாய் மொழியாக இல்லாத ஆங்கிலத்தில் பகவான் பெருங்காவியம் 24,000 அடிகளில் எழுதினார். இன்று வரை உலகம் அறிந்தும் அதன் சிறப்பை அறியாமலிருக்கிறது.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜடமும் ஆன்மாவும் சக்தியாக பிரபஞ்ச ஜீவியத்தில் இணைந்தபின் மேலும் உயர்ந்து பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்ம ஜீவியத்தில் ஆன்மாவாக இணைகின்றன. ஜடம் ஆன்மாவாகி, ஆன்மாவுடன் இணைந்து எங்கும் நிறை பரம்பொருளாகிறது. எங்கும் நிறை பரம்பொருள் சத்தியம். எனவே உலகம் சத்தியத்தாலானது.

**சத்தியத்தாலான உலகம் சத்தியம்.**



## ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

4. **ஒரு அபிப்பிராயத்தை சரி அல்லது தவறு எனக் கூற முடியாது.** *வாழ்வுக்குப் பயன்படும் அல்லது பயன்படாது எனலாம். அது* **காலத்தால் ஏற்பட்டது.** *காலப்போக்கில் அதன் பயன் குறைந்து விடுகிறது.* **அபிப்பிராயத்தைக் கடந்து உயர்ந்து நெடுநாள் நீடிக்கும் விவேகத்தை நாட வேண்டும்.**

அபிப்பிராயங்கள் பலதரப்பட்டவை. நாட்டுக்கு நாடு மாறும் அபிப்பிராயங்கள் உண்டு. காலத்தால் கனியும் அபிப்பிராயமும், மாறும் அபிப்பிராயமும் உண்டு. சிறுவர்கள், பெரியவர்கள் என்பதாலும் ஆண், பெண் என்பதாலும், படித்தவர், படிக்காதவர் என்பதாலும், நகரம், கிராமம் என்பதாலும் அபிப்பிராயங்கள் மாறும். *இன்றைய அபிப்பிராயம் நாளைய எதிரான அபிப்பிராயமாகும். இலக்கியத்துறைக்கே ஏற்பட்ட அபிப்பிராயங்கள் உண்டு.* அதுபோல் அரசியல், நாடகம், சினிமா, பத்திரிக்கைத் துறைகளுக்கென ஏற்பட்ட அபிப்பிராயங்கள் உண்டு. அவசரப்படுவது தவறு என்றொரு அபிப்பிராயம் உண்டு. அவசரப்படாமலிருப்பது தவறு என்ற அபிப்பிராயம் எழும் நேரம் உண்டு. சாப்பிடும் பொழுது பேசக்கூடாது என்பது நம் அபிப்பிராயம். பேசும் பொழுது சாப்பிடுவதே சாப்பிடுவது என்பது மேல்நாட்டு அபிப்பிராயம். தகப்பனார் பேச்சைத் தட்டக்கூடாது என்பது பெரிய வலுவான அபிப்பிராயம். மேற்படிப்பிற்குப் போக வேண்டாம், அமெரிக்கா போவது தவறு, கலப்புத் திருமணம் உதவாது, அரசியல் தவறு, உள்ளதைச் சொல்லக்கூடாது என்று தகப்பனார் கூறும் பொழுது தகப்பனார் பேச்சை மறுப்பது சரி என்று உலகம் அபிப்பிராயம்

கூறும். எழுதுவது, ஏர் ஓட்டுவது, கொழுக்கட்டை சமைப்பது, ஆகியவை திறமைகள் (**skills**). ஏர் ஓட்டுவது என்ற திறமை டிராக்டர் வந்தபிறகு பயன்படாது. எழுதுவது என்ற திறமை கம்ப்யூட்டர் வந்தபிறகு ஏராளமாக அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. கொழுக்கட்டை செய்வது பெரும் திறமையாக இருந்தது ஒரு காலம். இன்று அத்திறமை பயன்படாது. *திறமைகள் முக்கியத்துவத்தை இழக்கின்றன*. திறமை சரியா, தவறா என்பது பிரச்சனையில்லை. அதே போல் ஒரு அபிப்பிராயம் ஒரு காலத்தில் பயன்பட்டது. காலம் மாறியபின் அதற்குப் பயனில்லை. வில் வித்தை, மல்யுத்தம் தம் பெருமையை இழந்தன. அரசனின் வாக்கு ஆண்டவன் வாக்காக இருந்தது. இன்று அந்த அபிப்பிராயம் மாறி விட்டது. உலகில் மன்னிக்க முடியாத குற்றமேயில்லை. *நகைமுகம் உலகம் படைத்துள்ளது*. மனிதனுடைய பார்வை குறையானது. குறை உலகிலில்லை. பார்வையை மாற்றினால் ஜடம் மறையும். பெண் பேய் என நினைப்பது பெண்ணில்லை. அவளுடைய அற்புதமான நிலையை அறியாத மனம் நினைப்பது. வாழ்வு பயங்கரமானதல்ல. *வாழ்வு சிறியது, வளர்கலை பெரியது என வளரும் கலையான பரிணாமம் வர்ணிக்கப்பட்டது*. சிருஷ்டி பரிணாமமாக மாறும் பொழுது கலை வளர்ந்து பிரபஞ்சம் அழியும் நேரம் உண்டு. அதைப் பிரளயம் என்கிறோம். *பிரளயம் வந்தபின்னும் இருப்பது வாழ்வு*. மனம் கோணலானது என்றனர். கோணல் மனத்திலில்லை. நம் பார்வையில் உள்ளது. எப்படி மனம் உற்பத்தியாயிற்று, என்ன காரணத்திற்காக சிருஷ்டிக்கப்-பட்டது என்று அறிந்தால் குதர்க்கம் மனத்திலில்லை, நாம் அதையறிவதில் உள்ளது என்று விளங்கும் என பகவான் கூறுகிறார். துன்பத்தை நாம் பாவம் செய்து அனுபவிக்கிறோம் என நினைக்கிறோம். *ஜீவியம் இருளில் புதைந்து வெளிவர முயலும் பொழுது நாம் அதைத் துன்பமாக அறிகிறோம் என்கிறார் பகவான்*. பகவான் சிருஷ்டிக்கு வெளியிலிருந்து சிருஷ்டியைக் காண்பதால் அவருக்கு இவை தெரிகின்றன. உபநிஷதங்களும், வேத ரிஷிகளும் கூறியவை மேற்கண்டவை என்றாலும், அவர்கள் அடுத்த பக்க உண்மையைக் காணாமலில்லை.



இரண்டு பக்கமும் தெரிந்தாலும் அவர்கள் ஒரு பக்கத்தையே கருதினர். நாம் இன்று புறக்கணிப்பது நாளை வலுவாக மீண்டும் வந்தால் அதை நாம் புறக்கணித்தது தவறு என்று அறிய வேண்டும். பரம்பொருளை ஏற்று ஜடத்தை மறுத்தாலும், ஜடத்தை ஏற்றுப் பரம்பொருளை மறுத்தாலும் *சிருஷ்டியின் அடிப்படையான உண்மையெனும் ஐக்கியம் விலகுகிறது*. ஐக்கியத்தைப் போற்றினால் அதிகபட்ச உண்மை தெரியும். இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் முழுமையில்லை. குறை எழும். இரண்டையும் ஏற்கும் பொழுது நாம் காண்பது பரம்பொருள். உலகமே அப்பரம்பொருளாலானது. நம் பார்வை சுருங்கி ரூபத்தை மட்டும் ஏற்றால் பேருண்மை விட்டுப் போகும். ரூபத்தைக் கடந்த விஷயத்தை ஏற்று சிருஷ்டியை மட்டும் கருதுவதற்கு பதிலாக சிருஷ்டியையும் பரிணாமத்தையும் கருதினால், பகுதியை ஏற்காமல் வேதம் உணர்ந்த ஐக்கியத்தை சத்திய ஜீவியத்திலும் உணர்ந்தால், குறைந்த பட்சம் அதிகபட்ச-மாகும். பகுதி முழுமையாகும், ஜடம் பரம்பொருளாகும், மனிதன் இறைவனாவான், ஜடத்திற்கும் ஜீவியம் உண்டு எனத் தெரியும். சச்சிதானந்த பிரம்மத்தை தவத்தால் உயர்ந்து மனிதன் எட்டினான். சச்சிதானந்தம் அருளாகவும் பேரருளாகவும் பொருள்களில் தன் ஆனந்தம் வளர்ந்து வெளிவர முயல்வதைக் கண்டு, *ஜடம் ஆனந்தமய ஜீவன்* **Matter is Being of Delight** *எனக் காணலாம்*.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஐக்கியம், ஒற்றுமை, ஒருமை என்பன இலட்சியம் என்றால் நாம் எட்டியது எது? ஜடமும் ஆன்மாவும் சக்தியாக இணைந்தது போல் மனித குலம் ஒன்றுபட வேண்டும். தற்கால நாகரிகம் தந்தியைக் கண்டு பிடித்து செய்தியால் உலகை ஒன்றுபடுத்த முயல்கிறது. ரேடியோ வந்தபின் கம்பியும் போய் விட்டது. இனி இரு முனைகளிலும் ரிசீவர், **transmitter** அனுப்பும் இயந்திரம் உண்டு. எதிர்காலத்தில் அவையும் அழியும். எஞ்சி நிற்பது மனம் மனிதனில் பெற்ற அகந்தை. அகந்தை அழிந்தால் மனித ஜீவியம் (**human consciousness**) பிரபஞ்ச முழுவதும் பரவி ஒன்றாகும்.

# The Life Divine – Outline

## தமிழ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

*அத்தியாயம் 11 - ஆனந்தம் - பிரச்சனை என்பது.*

மனிதனுக்கு தர்மம், நியாயம், பாவம், புண்ணியமுண்டு, விலங்குக்கு அவையில்லை. தெய்வங்கட்கும் அவையில்லை. மனித தர்ம கண்ணோட்டத்தில் மூவுலகையும் புரிந்து கொண்டால் கொடுமை, கடுமை, இருள், தீமையைக் காண்கிறோம். இது நம் தவறு. உலகில் தீமையில்லை. சச்சிதானந்தம் தான் பெற்ற ஆனந்தத்தை உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளிலும் வெளிப்படுத்துகிறது. அதைக் காணும் மனிதன் சிருஷ்டியை அற்புதமாகக் காண்பான். மனிதனுக்கு ஆனந்தம் தெரிவதில்லை. ஜீவராசிகள் தெரிகின்றன. அவை வெளிப்படுத்தும் ஆனந்தத்தைப் பெற மனிதன் அப்பொருள்களை நாடுகிறான். ஆனந்தத்தை மறந்து விடுவதால், அவன் துன்பம் எய்துகிறான். B.A. படித்து பட்டம் பெற்றவன் பெயருக்குப் பின்னால் B.A. என்று போடுவதைக் கண்ட பாமரன் தன் பெயருக்குப் பின்னால் B.A. போட்டால் கேலிக்குரியவனாவான். அதையே வலியுறுத்தினால் ஜெயிலுக்குப் போவான். மனிதன் படும் துன்பம் இதுபோன்றது.

*அத்தியாயம் 12 - ஆனந்தம் - தீர்வு*

இந்த 11, 12 அத்தியாயங்கள் இதுவரை உலகில் எழாத தத்துவங்கள். வேதம், உபநிஷதம், பௌத்தம், கிருஸ்த்துவம், இஸ்லாம், கீதை, சங்கரர் அத்வைதம் கூறாதது அது. உலகில் இருள், கொடுமை, தீமை, கடுமையுள்ளன. இவற்றைப்பற்றி எவரும் கூறாதது ஸ்ரீ அரவிந்தம் சொல்வது. அனைவரும் எப்படித் தீமையிலிருந்து தப்பலாம் எனக் கூறினர்.



ஸ்ரீ அரவிந்தர் -

- எப்படி தீமையை நன்மையாகத் திருவுருமாற்றலாம்.
- ஏன் அது தீமையல்ல, நன்மையைவிடப் பெரிய நன்மை என்கிறார்.

வேதம் சரணாகதியால் தீமையிலிருந்து விலகி தப்பிக்கிறது. உபநிஷதம் வலியும், இன்ப துன்பங்களும் இணைந்தவை. இன்பத்தை நாடினால் தவறாது துன்பம் உடன் வரும். அதனால் துன்பத்தைத் தவிர்க்கும் வழி இன்பத்தை விலக்குவது என்றது. இது விரதம்.

பகவான் வலி, வலியில்லை. பார்வைக்கு வலி, அடிப்படையில், உண்மையில் வலி என்பது பேரின்பம். நாம் வலியை வலியாக ஏற்காமல் உணர்ச்சியாக ஏற்று இன்பமாகத் திருவுருமாற்ற முடியும் என்கிறார்.

*அத்தியாயம் 13 - தெய்வீக மாயை*

பரம்பரையாக இல்லாததை மாயம் என்றனர். மாயை எனில் இல்லாதது. உலகம் மாயை எனவும் கூறினர். பகவான் மாயையை, தெய்வீக மாயை எனக் குறிப்பிடுகிறார். இதுவே பிரம்மத்தை சிருஷ்டியாக மாற்ற உதவியது எனவும் கூறுகிறார். *பிரம்மத்துள் அனைத்தும் உள. அனைத்தும் அனைத்துமாகும். மாயை இந்நிலையை சிருஷ்டியில் அனைத்தும் ஒன்றிலும், ஒன்று அனைத்திலுமாக மாற்றுகிறது என விளக்கம் தருகிறார்.*

பரம்பரை சத்திய ஜீவியத்தை அறியும். ஆனால் அதை முக்கியமாகக் கருதவில்லை. மனத்தை முக்கியமாகக் கருதியது. பிரம்மா உலகை சிருஷ்டித்தார் என்றது. பிரம்மா மனம் என்ற லோகத்திற்குரிய கடவுள். விஷ்ணு, சிவன், இந்திரன், காளி, லட்சுமி, சரஸ்வதி அந்த லோகத்திற்குரிய இதர கடவுள்கள். இவர்கள் அனைவரும், பிரம்மா உள்பட, பிறந்த இடம் சத்திய ஜீவியம். பகவான் உலகை பிரம்மா சிருஷ்டித்தார் என்பதை ஏற்கவில்லை. சத்திய ஜீவியம் சிருஷ்டித்தது என்கிறார்.

*சத்திய ஜீவியம் சச்சிதானந்தத்திற்கும், மனத்திற்கும் இடையேயுள்ளது.* சச்சிதானந்தம் அகமும் புறமுமாக மாறிய பொழுது புறமாக ஏற்பட்டது சத்திய ஜீவியம்.

மனம் காலத்தில் செயல்படும். ஆத்மா காலத்தைக் கடந்தது. காலமும், காலத்தைக் கடந்ததும் இணையும் லோகம் சத்திய ஜீவியம். இக்காலத்தை முன்னோர்கள் கூறவில்லை. பகவானே முதலில் இக்காலத்தைக் குறிப்பிடுகிறார். இது காலமும், கடந்ததும் இணைந்து ஒன்றிய காலம் எனக் குறிப்பிடுகிறார். இக்காலம் செயல்படும்பொழுது நிகழ்ச்சிகள் க்ஷணத்தில் நிகழும். இந்த லோகத்தில் தீமையில்லை. இது பூலோக சுவர்க்கம். இதை ஒரு சிலர் அகத்தில் பெற்றனர். இராமலிங்க சுவாமியும் பெற்றார். புறத்தில் எவரும் பெறவில்லை.

*அத்தியாயம் 15 - சத்திய ஜீவிய ஜீவியம்*

மரபு புருஷனை முடிவாகக் கருதியது. அவன் உயர்ந்த நிலையை புருஷோத்தமன் என கீதை கூறியது. ஆத்ம, புருஷ, ஈஸ்வர நிலைகள் மூன்று. மரபு ஈஸ்வரன் பிரளயத்தில் அழிகிறது எனக் கண்டதால், புருஷனை (அக்ஷர புருஷனை) மூலமாகவும், முடிவாகவும் கொண்டனர். பகவானுடைய சிருஷ்டியில் பிரளயம் அழிகிறது. ஈஸ்வரன் அழியவில்லை. *மனிதன், பிரபஞ்சம், பிரம்மம் என்ற மூன்று அம்சங்களைத் தாங்கி வர புருஷனால் முடியாது. ஈஸ்வரனாலேயே முடியும் என்றார்.* உலகை அற்புதமாக்குவது ஈஸ்வரன். இவன் செயல்படத் தேவையான காலத்தையும், இடத்தையும் சிருஷ்டிப்பது இந்த ஜீவியம்.

*அத்தியாயம் 16 - சத்திய ஜீவியத்தின் மூன்று லோகங்கள்*

இறைவன், ஜீவாத்மா, மனிதன் என்ற மூன்று நிலைகளை மையமாகக் கொண்ட மூன்று லோகங்களைச் சத்திய ஜீவியம் சிருஷ்டிக்க அது இரண்டாகப் பிரிகிறது. அகம், புறமாகப் பிரிகிறது. அகம், புறம் இவற்றிடையே மனம் உற்பத்தியாகிறது.



*அத்தியாயம் 17 - தெய்வீக ஆன்மா*

மரபு சிருஷ்டியைக் கூறுகிறது. பரிணாமத்தைக் கூறவில்லை. இறைவனிடமிருந்து உலகை நோக்கி கீழே வருவது சிருஷ்டி. உலகிலிருந்து மேல் நோக்கி இறைவனை நாடுவது பரிணாமம். பரிணாமம் மரபு அறியாதது. ஜடத்திலிருந்து வாழ்வுக்கும், வாழ்விலிருந்து மனத்திற்கும், மனத்திலிருந்து சத்திய ஜீவியத்திற்கும் பரிணாமம் எழுவது உடல், உயிர், மனம், ஆன்மாவாகும். *அந்த ஆன்மாவை தெய்வீக ஆன்மா என பகவான் குறிப்பிடுகிறார்.* இது சச்சிதானந்த லீலையில் உள்ளது. எப்பொழுதும் பிரம்மத்தின் முன் இருப்பது. பரமாத்மாவிலும், ஜீவாத்மாவிலும் உறைவது. சத்திய ஜீவிய 3 நிலை வாழ்வையுடையது.

*அத்தியாயம் 18 - மனமும் சத்திய ஜீவியமும்*

மனம் எப்படிச் சிருஷ்டிக்கப்பட்டது என மரபு கூறியதாகத் தெரியவில்லை. வேதம் மனம் கோணலானது எனக் கூறுகிறது. பகவான் மனம் வாழ்வையும், ஜடத்தையும் உற்பத்தி செய்தது எனவும் மனத்தின் மகத்தான சிறப்புகளையும் கூறுகிறார்.

சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரியும்பொழுது இடையே மனம் உண்டாகிறது. மனத்தில் அஞ்ஞானமில்லை. மனம் சத்திய ஜீவியத் தொடர்பை இழந்தால் அஞ்ஞானம் உற்பத்தியாகிறது. மனம் தன்னை தன்னில் இழந்தால் அஞ்ஞானம் வலுப்படும். மனம் உயிரில் தன்னை இழந்தால் அஞ்ஞானம் பெரிதும் வளரும். மீண்டும் மனம் உடலில் தன்னை இழப்பது அஞ்ஞானம் முழுமையடைவது. உயிரிலிருந்து மனம் விடுபட்டால், உடலின் அஞ்ஞானத்தை மனம் இழந்தால், பிராணமய புருஷ தரிசனம் கிட்டும். மனம் உயிரிலிருந்து மீண்டால், மனோமய புருஷ தரிசனம் கிடைக்கும். மனத்தின் அஞ்ஞானத்திலிருந்து மீண்டால், சத்திய ஜீவன் தரிசனம் தருவான். பொதுவாக மனோமய புருஷனை ரிஷிகள் ஜீவாத்மா எனத் தவறாக அறிவதுண்டு. அது ஜீவாத்மாவின் பகுதி.

(தொடரும்)

## நெஞ்சுக்குரிய நினைவுகள்

கர்மயோகி

### The Life Divine

நூல் இரு பாகங்களாலானது.

முதற்பாகம் - சிருஷ்டி - 28 அத்தியாயம் (பரம்பொருள் பிரபஞ்சமாயிற்று).

இரண்டாம் பாகம் - பரிணாமம் - 28 அத்தியாயம் (அஞ்ஞானம் ஞானமாவது).

இதை இருபகுதிகளாகப் பிரித்துள்ளார்.

முதற்பகுதி - அனந்த ஜீவியம் உலகமாகும் 14 அத்தியாயம்.

இரண்டாம் பகுதி - ஞானம் பரிணாமத்தால் ஆன்மாவாவது 14 அத்தியாயம்.

நூலின் சுருக்கத்தை முதல் அத்தியாயத்திற்கு முன்பக்கத்திலும், இரண்டாம் புத்தகத்திற்கு முன் இரு பக்கங்களிலும் இரண்டாம் பகுதியின் 15 அத்தியாயத்திற்கு முன்பக்கத்திலும் எழுதுகிறார். அது,

பரம்பொருள் பிரபஞ்சமாயிற்று.

ஞானம் அஞ்ஞானத்திலிருந்து பரிணாமத்தால் எழுகிறது.

அனந்த ஜீவியம் உலகமாகியது.

ஞானத்திலிருந்து பரிணாமத்தால் ஆன்மா உருவாகிறது.

**நூலின் முதற்பாகம்**

பரம்பொருள் உலகமாக மாறியது.

பரம்பொருள் உலகை சிருஷ்டித்தாரெனில் உலகம் கடவுளினின்று பிரிந்து விடுகிறது.

ரிஷிகள் சத்திய ஜீவியத்தைக் காணாததற்கு இதுவே காரணம்.



பகவான் இதை மாற்றி பரம்பொருளே உலகமாயிற்று (மனிதனாயிற்று) என்பதால் மனிதனுக்கும் பரம்பொருளுக்கும் இடைவெளியில்லை என்கிறார்.

முதல் 28 அத்தியாயங்களையும் ஒவ்வொன்றையும் ஒரு வரியில் கீழே எழுதுகிறேன்.

1. இறைவனை ஜோதி, சுதந்திரம், மரணமில்லா வாழ்வாக அடைய மனிதன் முனைகிறான்.
2. ஜடம் ஆன்மாவுக்கு ஆடை என உபநிஷதம் கூறுகிறது.
3. சன்னியாசி பிரம்மத்தின் வாயிலில் காலத்தைக் கடந்த பிரம்மத்தை அசைவற்ற, அமைதியான, சிதைவற்றதாகக் காண்கிறான்.
4. உலகிலுள்ள அனைத்தும் பரம்பொருளே.
5. சிருஷ்டி இழந்த ஒற்றுமையை மனிதன் மீண்டும் பெற பாதாளத்தையும் பரமாத்மாவையும் இணைப்பதே மனிதனுக்கு ஆன்மிகக் கடமை.
6. மனிதனுக்கு மூன்று ஜீவிய நிலைகள் 1) மனிதன் 2) பிரபஞ்சம் 3) காலத்தைக் கடந்த பிரம்ம நிலை.
7. அகந்தை எதிரெதிரான இரட்டைகளை (ஜோதி x இருள்) உற்பத்தி செய்கிறது.
8. வேதாந்தம் 4 சூத்திரங்களாக பிரம்மத்தை வர்ணிக்கிறது.
9. சத் புருஷன் ஜீவனும், ஜீவியமுமாகும்.
10. சித் சக்தி; சக்தி ஜீவனுடையது.
11. சச்சிதானந்தம் பொருட்களில் ஆனந்தத்தை வெளியிடுகிறது.
12. ஆடுபவனும் அவனே. ஆட்டமும் அவனே. அரங்கமும் அவனே.

13. மாயை எல்லாம் எல்லாமுமான பிரம்மத்தை பலவாக்கி ஒன்றினுள் அனைத்தும், அனைத்துள் ஒன்றுமாக (all is in each, each is in all) சிருஷ்டித்தது.

14. சச்சிதானந்தத்திற்கும் மனத்திற்கும் இடையே சத்திய ஜீவியம் உள்ளது. இதுவே உலகைப் படைத்தது.

15. சத்திய ஜீவியம் காலம், இடத்தை சிருஷ்டித்தது.

16. சத்திய ஜீவியத்திற்குள்ள மூன்று நிலைகள்,

இறைவன் - ஜீவாத்மா - அகந்தை

17. தெய்வீக ஆன்மா -- இதற்கு மூன்று சத்திய ஜீவிய நிலைகள் உள்ளன.

18. சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்த பொழுது இடையில் மனம் உண்டாயிற்று.

19, 20, 21, 22. - மனம் வாழ்வை சிருஷ்டித்தது.

- வாழ்வு: மரணம் வாழ்வுக்கு நித்தியதத்துவம் அளிக்கிறது.
- ஆசை அன்பாகி ஆனந்தமாகிறது.
- சக்தியும் ஜீவியமும் பிரிந்தவை இணைய வேண்டும்.

23. சைத்திய புருஷனே நம் உண்மையான ஆத்மா. அகந்தையில்லை.

24. ஜடம் - ஜடம் ஆனந்தமயமான ஜீவன்.

25. ஜடம் என்று உலகில் இல்லை. மனிதன் ஏற்பதால் ஏற்பட்டது.

26. சிருஷ்டியில் எட்டு தத்துவங்கள்.

ஒரு சமயம் ஒரு தத்துவம் மட்டும் செயல்படும்.

27. சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம்.

ஜடம், வாழ்வு, சைத்திய புருஷன், மனமாக மாறின.

28. சத்திய ஜீவியத்தை அடைய கீழே போய் அடி மனம் சேர்ந்து எழுந்து உயர்ந்து மேலே போக வேண்டும்.



**இரண்டாம் புத்தகம்**

(ஒரு வரியில் அத்தியாயக் கருத்து)

## Book II Part I

அத்தியாயம்

1. நாம் காணும் விபரமற்ற பொருட்கள் பிரபஞ்சத்தால் நிர்ணயிக்கப்பட்டவை.

அதன் மூலம் பிரம்மம் - நிர்ணயத்தைக் கடந்தது.

2. பிரம்மம், புருஷா, ஈஸ்வரா என்பவை மூன்று தனித்தனியானவையல்ல. மூன்றும் ஒன்றே.

3. ஜீவாத்மாவே பரமாத்மா.

4. தெய்வீகம், அதற்கெதிரானவை என காண்பவை அனைத்தும் தெய்வீக உருவமுடையனவே.

5. பிரபஞ்சம் மாயை என்பது உண்மையல்ல. பாம்பும் பழுதும் இல்லாதவையல்ல.

6. சத்தியமும் பிரபஞ்ச மாயையும் - மாயை என நாம் அறிவது அஞ்ஞானம்.

7. ஞானம், அஞ்ஞானம் இருவேறு அல்ல. ஞானமே தன்னை அஞ்ஞானமானதாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளது.

8,9. அறியாமை சுயஜீவியத்தில் சுய அனுபவம் பெற்றால், அகந்தையாகிறது.

10. ஞானம் நால்வகை.

- நேரடியான ஐக்கியமான ஞானம்
- நெருக்கமான நேரடி ஞானம்
- பிரிந்தும் நேரடியான அடிமன ஞானம்
- பிரிந்த நிலை மேல் மன ஞானம்

11. எழுவகை அஞ்ஞானம்.

- ஆதியின் அஞ்ஞானம்
- பிரபஞ்ச அஞ்ஞானம்

- அகந்தையின் அஞ்ஞானம்
- காலத்தின் அஞ்ஞானம்
- ஜீவனின் அஞ்ஞானம்
- அமைப்பின் அஞ்ஞானம்
- நடைமுறை அஞ்ஞானம்

12. அஞ்ஞானத்தின் ஆதி - மனம் சத்திய ஜீவியத் தொடர்பை இழந்தால், அஞ்ஞானம் உற்பத்தியாகிறது.

13. உயர்ந்த நிஷ்டை - அஞ்ஞானம் ஞானத்தைவிடப் பெரியது.

14. வேறுபட்டது நாளடைவில் இருண்டு தீமையாகிறது.

## Part 2

15. பரமாத்மாவோ, ஜீவாத்மாவோ முடிவல்ல - *இரண்டையும் தன்னுட்கொண்ட பிரம்மமே முடிவு.*

16. முடிவான பிரம்மம் முதன்மையான வாழ்வில் தன்னை வெளிப்படுத்துவது அவசியம்.

17. பாதாளமும் பரமாத்மாவும் மனிதனில் இணைகின்றன.

18. இணைந்தவை எழுந்து உயர்ந்து திருவுருமாறி, பிரம்மத்துடன் ஐக்கியமாகின்றன.

19. எழுவகை அஞ்ஞானம் திருவுருமாற்றத்தால் எழுவகை ஞானமாகிறது.

20. வாழ்வின் முதல் இரகஸ்யம் பிறப்பு, இரண்டாம் இரகஸ்யம் மரணம்.

21. மரணத்தால் பிரிந்த உயிர் மறுபிறப்புவரை சூட்சும உலகில் தங்கும்.

22. பிறப்பைக் கடந்து, சிருஷ்டியைக் கடந்த நிலையில் பிரம்மத்தை அறிபவன் ஆத்மாவுக்கு மரணமில்லை.



23. ஆத்மா, மனம், வாழ்வு திருவுருமாறும் பொழுது உடலும் உடன் போதுமான அளவு திருவுருமாறினால் மரணமும், மறுபிறப்பும் தவிர்க்கப்படும்.

24. தன்னுயிரில் திருவுருமாறிய ஆத்மா பிரபஞ்சம் முழுவதும் வியாபித்தால் அவனால் அடுத்த ஆத்மாவுக்கு ஆன்மிக உதவி செய்ய முடியும்.

25. அதைச் செய்ய மூன்று திருவுருமாற்றம் தேவை: அவை 1) சைத்திய திருவுருமாற்றம், 2) ஆன்மிகத் திருவுருமாற்றம் 3) சத்திய ஜீவியத் திருவுருமாற்றம்.

26. மனிதன் சத்தியஜீவியத்தையடைய கீழே போய் அடிமனத்திலிருந்து உயர்ந்து செல்ல வேண்டும்.

27. சத்திய ஜீவன் நாடுவது எதுவுமில்லை - இருப்பதே இலட்சியம்.

28. மனிதன் மனமில்லை, சத்திய ஜீவியம் என்று புரிந்து அதை சித்திப்பதே யோகம்.

(தொடரும்)

### ஜீவிய மணி

*ஜேன் பிங்கிலிமீது பிரியப்பட்டாள். பெண் பிரியப்பட்டாலும் ஆண் பேச்செடுத்து அவளைக் கேட்கும்வரை அவள் அவசரப்படக்கூடாது. அது எல்லா பெண்களும் செய்வது. பழக்கம் (feminine manners) பெண்களுக்குரிய நல்ல பழக்கம். நடத்தை (behaviour) அதைக் கடந்தது. "ஒரு பெண் தான் விரும்புபவனை நாடக்கூடாது. மனத்தாலும் நாடக்கூடாது. அவனே வந்து பேசி தன் விருப்பத்தைக் கூறும்வரை அவனுக்கு அவள் மனதில் இடமில்லை. அத்துடன் ஊரார் நான் பிங்கிலியை நாடுகிறேன் என்று பேசும் அளவுக்கு நடந்து கொள்ளக்கூடாது'' என அவள் நம்புகிறாள். அந்த நம்பிக்கைக்குப் பவர் உண்டு. அதன்படி மனத்தளவில் அவள் பிங்கிலிக்கோ, ஊராருக்கோ இடம் தரவில்லை.*

**நம்பிக்கை வலுவானது. அதன் பலம் பலனாக எழுந்தது.**

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### *15. அசுர சூறாவளி (Tornado)*

இந்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருக்கு அமெரிக்காவில் ஒரு மாதம் (visiting professor) சில பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவு ஆற்றும் பணி ஏற்பட்டது. இவர் அமெரிக்காவில் தங்கி ஏற்கனவே 5 ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்றவர். அடிக்கடி அமெரிக்கா, கானடா போன்ற இடங்களுக்கு இதுபோன்று பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்துப் போகும்பொழுது தம்முடைய பழைய நண்பர்களைச் சந்திப்பது வழக்கம்.

இம்முறை பேராசிரியர், கம்ப்யூட்டர் விஞ்ஞானி ஒருவரைச் சந்திக்க அவரிருந்த ஊருக்குப் போனார். அவருடன் இரு நாட்கள் தங்கினார். மறுநாள் திங்கள் கிழமை காலை 11 மணிக்கு 100 மைலுக்கு அப்பாலுள்ள கல்லூரியில் சொற்பொழிவு. ஞாயிறு மாலை புறப்பட்ட அவரை நண்பர் மறுநாள் காலையில் போகலாம் எனக் கேட்டுக்கொண்டதை மறுத்து, பேராசிரியர் புறப்பட்டுப் போய்விட்டார். திங்கள் காலை 8 மணிச் செய்தியில் முதல் நாள் அவர் தங்கியிருந்த பகுதியில் (Tornado) சூறாவளியால் சேதம் என்று அறிவித்தார்கள். பேராசிரியர் நண்பரைப் போனில் கூப்பிட்டு விசாரிக்க நினைத்த அதே நேரத்தில் நண்பரிடமிருந்து போன் வந்தது.

தென்னிந்தியாவில் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் அடிக்கும் காற்றை நாம் புயல் என்றும், சுழற்காற்றென்றும் அறிவோம். சுமார் 50 மைல் முதல் 70, 80 மைல் வேகத்தையும் எட்டிவிடும். அளவுகடந்த சேதம் ஏற்படுவது அப்பொழுதுதான். பூமத்திய ரேகை நாடுகளான ஜாவா, சுமத்திரா, பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களில் டைபூன் (typhoon) என்று வர்ணிக்கப்படும் காற்று அதிகச் சேதம் விளைவிக்கக்கூடியது. தீவுகளில் வீசும் புயலுக்கு



ஹரிகேன் (huricane) என்று பெயர். சேதம் விளைவிப்பதில் தலைமையானது இது. அமெரிக்காவில் டார்னடோ (Tornado) என்று கூறப்படும் காற்று 300 மைல் வேகத்தில் வீசும். ஏதோ ஒரு சமயம் இதன் வேகம் 500 மைலைத் தொடக்கூடும். புயல் இரவெல்லாம் அடிப்பது உண்டு. டார்னடோ சில நிமிஷங்கள் வீசி அடங்கிவிடும். 1964-இல் அதுபோன்ற சேதம் அமெரிக்காவில் ஏற்பட்டபொழுது 70 டன் எடை உள்ள ரயில்வே கோச்சுகள் 100 அடி தூரத்திற்குத் தூக்கி எறியப்பட்டன, கார்கள் காற்றில் பறந்தன, 50 குழந்தைகளைக் காற்றில் உயரே தூக்கிப் பலூன் போல வெகுதூரத்தில் போட்டுவிட்டது. அதுபோன்ற ஒரு விபத்து நேர்ந்துள்ளது என்பது பேராசிரியருக்குக் கவலையளித்தது.

நண்பர் போனில் பேசினார். தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் ஆபத்தில்லை என்றார். தன்னைச் சுற்றிப் பெரிய சேதம் என்றார். பேராசிரியருக்கு நிம்மதி ஏற்பட்டது. தான் முன் இரு தினங்களும் நண்பர் வீட்டில் தங்கியிருந்தபொழுது அன்னை படத்தின்முன் அமர்ந்து தியானம் செய்தது நினைவுக்கு வந்தது. அன்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டுச் சொற்பொழிவாற்றப் போனார். அது முடிந்தவுடன் நேரே நண்பர் தங்கிய இடத்திற்குச் சென்றார். அது ஒரு செல்வர்கள் உள்ள காலனி. 90 வீடுகள் மட்டுமேயுள்ள இடம். வீடுகள் தரை மட்டமாக இருந்தன; வீடுகள் இருந்த இடத்தில் இடிந்த குவியல்களே (debris) காணப்பட்டன; மரங்களைக் காணோம்; வேஷ்டியைத் துவைத்துப் பிழிவதைப் போல் எலக்ட்ரிக் கம்பங்கள் சுருட்டி வளைத்துக் கொண்டிருந்தன; எங்குப் பார்த்தாலும் காற்றின் அமர்க்களம்; உயிர்ச் சேதம் அதிகம்; அடிபடாதவர்களேயில்லை. நண்பருடைய மாடி வீடு மட்டும் நிலைகுலையாமல், ஆடாமல், அசையாமல் இருப்பதைக் கண்ட பேராசிரியர் ஸ்தம்பித்துப் போனார். நண்பரும், அவர் குடும்பத்தினரும் உயிர் தப்பியது ஆச்சரியம். அவர்கள் வீடு சேதமடையாததை அங்கு நின்றுகொண்டு இருக்கும்பொழுது அவரால் நம்ப முடியவில்லை. (நண்பர், தாம் எப்படிக் காப்பாற்றப்பட்டோம்

என்று தெரியாமல் திகைப்பதாகச் சொன்னார்). நண்பர் வீட்டில் நின்ற 150 அடி உயர மரம்கூட சேதப்படவில்லை, அவர்களுடைய இரண்டு கார்களும் சேதப்படவில்லை. மரத்தின் கிளை ஒன்று ஒடிந்து கார் மீது விழுந்து, கண்ணாடி மட்டும் சேதப்பட்டுள்ளது. வீட்டு மாடியில் கொரனாஸ் சிறிதளவு சேதப்பட்டது. பேராசிரியரை நண்பர் மீண்டும் மீண்டும் கேட்டார், “எப்படி நான் காப்பாற்றப்பட்டேன்?” என்று.

பேராசிரியருக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. ‘அன்னையின் அற்புதங்களை நான் 20 ஆண்டுகளாகப் பல வகைகளில் பார்த்திருக்கிறேன், இது என்னால் நம்ப முடியாத ஒன்று. இரண்டு நாட்களுக்குமுன் நான் பார்த்த இந்த இடம் எங்கே? என்னைச் சுற்றியுள்ள பாழடைந்த வீடுகள் எங்கே? இதன் நடுவில் ஒரு வீடும், அதன் உறுப்பினர்களும் முழுமையாகக் காப்பாற்றப்பட்டார்கள் எனில் அன்னையின் அருள் அவர்களுடைய வீட்டை இரும்புக் கவசமாகச் சூழ்ந்திருக்க வேண்டும்’ என்றெல்லாம் நினைத்த அவர், “அன்னையின் படம் இரண்டு நாட்கள் உங்கள் வீட்டில் இருந்தது. அதனுடைய பலனே இது” என்று சொல்லி முடித்தார்.

### 16. பரம்பரை வழி வந்த நோய்

ஒரு குடும்பத்தில் பலருக்கு ஒரு தலைமுறையில் ஆஸ்த்மா இருக்கிறது. அடுத்த தலைமுறையிலும் அது குழந்தைகளுக்கு வருகிறது. அன்னையிடம் அவர்களுள் ஒருவர் வந்தபின் 90% வியாதி குறைகிறது. மிச்சம் அப்படியேயிருக்கிறதென்றால், மிச்சமான அந்த 10% வியாதியை அருள் எப்படிக் குணப்படுத்தும்?

வியாதி என்பது உடலைப் பற்றியதானாலும், உணர்வுக்கும், அறிவுக்கும் வியாதியுடன் தொடர்புண்டு. போன தலைமுறை-யிலிருந்து தொடர்பு வந்து, அடுத்த தலைமுறைக்குப் போகிறதென்றால், அது உடலைப் பொறுத்தது. உடற்கூறு அப்படி (**constitutional defect**) இருக்கிறது என்றுதான் பொருள்.



மேலும் உடலிலுள்ள வியாதிக்கு வேர் சூட்சும உடலிலிருக்கும். சூட்சும உடலில் வியாதியின் வேர் அழிந்தால்தான் உடலிலிருந்து நோய் அறவே விலகும். சூட்சும உடலில் பல பகுதிகள் உள. மனதிற்கும், உணர்வுக்கும் சூட்சுமம் உண்டு. அதுபோல் உடலில் (**physical body**) சூட்சுமம் மூலாதாரத்தில் இருக்கிறது. அந்தச் சக்கரத்தில் வியாதி அழிந்தால் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கும்.

அருள் 90% வியாதியைத் தானே குணப்படுத்துவது பொதுவான வழக்கம். அதைத் தொடர்ந்து அன்பரின் முயற்சி அருளைப் பெற முயன்றால், மீதி 10% வியாதியும் ஒழியும். பொதுவாக 90% அழியத் தேவையான முயற்சி அடுத்த 10% அழியத் தேவை. அன்பர் இதில் வெற்றியடைய தாம் பல காரியங்கள் செய்யலாம்.

1. இதுவரை குணமானது போதும் என்று மனம் முடிவு செய்தால், அந்த முடிவே பலிக்கும். மீதியும் போக வேண்டுமானால், அறிவு தன் முடிவை மாற்றி, மீதியும் அறவே போகவேண்டும்; அதை ஒழிக்க முடியும் என்று புது முடிவை எடுக்க வேண்டும். (**Reinforce by hourly consecration***).
2. ஆஸ்த்மா மூச்சு சம்பந்தப்பட்டதானதால் தினமும் முடிந்த அளவு மூச்சு உள்ளே போகும்பொழுதும், வெளியே வரும்பொழுதும் ஒளியாக இருப்பதாக கற்பனை செய்தல் வேண்டும். **Lungs** முழுவதும் ஒளியால் நிரப்பப்பட்டதாக கற்பனை செய்தல் நலம். தினமும் பல முறையும் நினைக்கலாம்.
3. மூச்சுக்குரிய சூட்சுமச் சக்கரம் நாபிக்குப் பின்னால் முதுகு எலும்பில் இருப்பதால், அந்தச் சக்கரத்தில் ஒளியைக் கற்பனை செய்ய வேண்டும். இது மூச்சைத் தூய்மைப்படுத்தும்.

---

* **Hourly Consecration** - மணிக்கொரு முறை சமர்ப்பணம்

4. மூலாதாரம் ஒளியால் நிரம்புவதாகக் கற்பனை செய்தால் உடலின் சூட்சுமப் பாகங்கள் ஒளியால் நிரம்பி, வியாதியின் வேர் உடலின் சூட்சுமத்தில் அற்றுப்போகும். அதையே தீவிரமாகச் செய்தால், உடலை ஒளி ஊடுருவும்பொழுது, குடும்பத்திலுள்ள மற்றவர்கள் நோய் அழியும்; அடுத்த தலைமுறையில் உள்ளவர்கள் நோயும் அழியும்.
5. ஹிருதயத்திற்குப்பின் உள்ள ஆன்மாவில் ஒளியை நிரப்பினால் ஆன்மிக ஒளி பெருகும்போது, அந்த வியாதி கர்மபலனால் ஏற்பட்டிருந்தால், கர்மத்தின் வேரை அழிக்கும்.
6. இந்தப் பல்வேறு இடங்களில் ஒளியை நிரப்புவதற்குப் பதிலாக, அன்னையின் உருவத்தைக் கற்பனை செய்தால் அதிகப் பலன் உண்டு.

இது ஒரு முழு முயற்சி. பலித்தால் பூரண குணம் கிடைக்கும். சமர்ப்பணத்தை மேற்கொண்டு மணிக்கு ஒரு முறை வியாதியை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், பெரும்பலன் உண்டு.

அதற்குப் பதிலாக மணிக்கு ஒரு முறை என்பதை விட்டு, மணியடிக்கும்பொழுது அதாவது 10 மணி, 11 மணி, 12 மணிக்குச் சமர்ப்பணம் செய்ய மேற்கொண்டால் முழுப் பலனிருக்கும். 10 மணி என்றால், 9.59, அல்லது 10.1க்கு செய்வது 10 மணியாகாது. வினாடி முள் 59ஐத் தாண்டி 60ஐத் தொடும் க்ஷணம் செய்வதே முழுப் பலன் கொடுக்கும். ஒரு நாளில் நாம் விழித்திருக்கும் 15, 16 மணி நேரத்தில் இதுபோல் வினாடி தவறாமல் 5, 6 முறை சமர்ப்பணம் செய்ய ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாக 15, 16 மணியும் தவறாமல் அதைச் செய்யும் நாளில் வியாதியின் சுவடுகூட இருக்காது. சமர்ப்பணம் என்பது ஒரு வினாடி **(Mother)** அன்னை என்று நினைப்பதுவே. அதுவே இந்த முறைக்குப் போதும்.

நாம் அன்னையை ஏற்றுக்கொண்டதால் வியாதியின் சம்பந்தப்பட்ட **(here it is breath and the chakra behind the stomach)** சக்கரத்தில் அன்னையை உருவகப்படுத்தி, மூலாதாரத்திலும்



அதையே செய்து, மூச்சின் பாதையை ஒளியால் நிரப்பி, ஆன்மாவிலும் அன்னையைக் கண்டு, ஒவ்வொரு மணி அடிக்கும் வினாடியில், வினாடி தவறாமல் அன்னையை நினைவுகூர்ந்தால், மீதியுள்ள வியாதி தனக்குக் குணமாவதுடன், தன் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும், அடுத்த தலைமுறை-யில் நோயுற்றவர்களுக்கும் குணம் ஏற்பட்டு, உடலின் சூட்சுமத்திலும், ஆன்மாவின் அஸ்திவாரத்திலும் வியாதி பரம்பரையையும், கர்மத்தின் ஆதியையும் இழக்கும்.

### *17. மனநிம்மதி*

மனநிம்மதி என்பது கிடைக்க பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்பார்கள். எது கிடைத்தாலும் கிடைக்கும், மனநிம்மதி கிடைப்பது அரிது என்பது நம்முடைய அனுபவம். பதவி உயர உயர நிம்மதி குறைவது இயல்பு. சொத்து, பதவி, அந்தஸ்தை எல்லோரும் விரும்புகிறார்கள். அத்துடன் இன்றுள்ள அமைதி அவை எல்லாம் கிடைத்தபின் இருக்குமா என்றால், இருப்பது கடினம் என்பதை எல்லோரும் அறிவார்கள்.

கடவுள் சிருஷ்டியை வர்ணிக்கும் செய்யுள் ஒன்று. கடவுள் மனிதனைச் சிருஷ்டிக்கின்றார். பின்னர் தன்னருகேயுள்ள பல பாத்திரங்களிலுள்ள செல்வங்களை அவன் மீது வர்ஷிக்கின்றார். முதலில் 'ஆரோக்கியம்' என்ற பாத்திரத்தை எடுத்து அவனுக்கு அபிஷேகமாகத் தலை மீது கொட்டினார். பின்னர் 'கல்வி', 'தைரியம்', 'செல்வம்', 'சந்தோஷம்' என அங்கிருந்த அத்தனைப் பாத்திரங்களிலும் உள்ளதை, ஒன்று போக, மீதியை அவனுக்குக் கொடுத்துவிட்டார். அருகே இருந்தவர், கடைசிப் பாத்திரத்தில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ள முற்பட்டு, அதிலுள்ளது 'நிம்மதி' என்று அறிகிறார். கடவுள் அதை அவனுக்குக் கொடுக்கப்போவதில்லை என அறிந்த அவர், "ஏன் அதைக் கொடுக்கவில்லை?" என்று கடவுளைக் கேட்டதாகச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. "அதையும் கொடுத்து விட்டால் மனிதன் என்னை மறந்துவிடுவான்" என கடவுள்

பதிலிறுத்ததாகச் செய்யுள் முடிகிறது. உலகத்தில் மனநிம்மதி பெறுவது அரிது என்ற கருத்தை ஆண்டவன் செயலாகவே வர்ணிக்கும் செய்யுள் அது. நம்மை ஆழ்ந்து நோக்கினால், நாம் வாழும் உலகத்தில் உள்ள அனைவரையும் பற்றி நினைத்துப்பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இது போன்ற பெரிய உண்மைகளை அன்னை எப்பொழுதும் ஏற்றுக்கொள்வார். ஆனால் அதையே முடிவானதாகக் கொள்ள மாட்டார். அன்னை இது சம்பந்தமாக நமக்கு அறிவுறுத்துவது வேறு. ஆரோக்கியம், சக்தி (energy), அறிவு, உணர்வு, உற்சாகம், சந்தோஷம் ஆகியவை நம் வாழ்வில் அளவிறந்து ஏற்பட்டுள்ளன. அதேபோல் மனநிம்மதியும் எல்லையற்ற அளவில் நம் வாழ்வில் இருக்கின்றது. நாம் வாழ்வை அமைத்துக்கொண்ட வகையால், இயற்கையையும், இறைவனையும் விட்டுக் கொஞ்சம் அகன்று வருவதால் ஆரோக்கியம், சந்தோஷம் ஆகியவை குன்றி-வருகின்றன. அதேபோல் மனநிம்மதி குறைவதும் நாம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வகையால்தானே தவிர, நம் நிம்மதிக்குக் குறைவில்லை என்பது அன்னையின் கருத்து. தன்னிடம் வரும் அன்பர்களுக்கு இந்தக் கருத்தைச் செயலில் விளங்குவது போல் முதலிலேயே அன்பரின் மனத்தில் நிம்மதியை உற்பத்தி செய்து, ‘அன்னையைப் பற்றி நினைத்த மாத்திரம் மனம் நிம்மதியடைகிறது’ என்று சொல்லும் வகையில் மனத்தை மாற்றிவிடுகிறார். தாமிருக்கும் இடம் வந்தாலும், தம்மைப் பற்றிப் படிப்பவருக்கும், தன்னை மனதார நினைப்பவ-ருக்கும் மனதில் உடனே நிம்மதியை உற்பத்தி செய்வது அன்னையின் இயல்பு.

சாதாரண மனிதன் எப்படி இந்த நிம்மதியைப் பூரணமாக, நிலையாகப் பெறலாம்? அவன் நிம்மதியிலிருந்து விலகுவது எதனால்? எப்படித் திரும்ப வரலாம்? அதை நிலைபெறச் செய்யலாம்? அறிவும், உணர்வும், செயலும், பிரார்த்தனையும், அன்னை நினைவும் அதற்கு எப்படி உதவி செய்யும் என்பதைப் பற்றியதே இக்கட்டுரை.

(தொடரும்)



## அன்பர் அனுபவம்

தோழிகள் இருவர். அதில் ஒருவருக்கு திருமணம் நடந்த பின்பு இருவருக்குமிடையே பல ஆண்டுகளாகத் தொடர்பு இல்லை.

தாமதமாக இரண்டாவது நபருக்கும் திருமணம் ஆகி, 9 மாத கர்ப்பிணி. வயிற்றில் குழந்தை வளருகிறது என்றாலே, மற்றவர்கள் கேட்கும் கேள்வி, குழந்தை வயிற்றில் உதைக்கிறதா என்பது. இவருக்கு குழந்தை உதைக்கவே இல்லை மேலும் அசைவுகளை அவ்வளவாக உணர முடியவில்லை என்ற கவலை. ஸ்கேன் எடுக்கப் போகும் போதெல்லாம் இவருக்கு அச்சமும் பயமும் சூழ்ந்துகொள்ளும். ஸ்கேன் செய்யும் நபரே கடவுளை வேண்டிக்கொண்டு ஸ்கேன் செய்யத் தொடங்கும் அளவு பயம் கொள்வார்.

இந்த முறை ஸ்கேன் செய்யப் போனபொழுது அவருக்கு ஒரு ஆச்சர்யம் காத்துக்கொண்டிருந்தது. இம்முறை ஸ்கேன் செய்ய வந்த புதிய நபர் வேறு யாரும் அல்ல, அவருடைய நெருங்கிய தோழி. பல வருடங்களுக்குப் பிறகு சந்தித்த மகிழ்ச்சி. நலம் விசாரிப்புகள் எனத் தொடங்கி பயம் வரை பகிர்ந்து, ஸ்கேன் எடுக்கும் தோழியின் அம்மாவைப் பற்றி விசாரித்தார். அம்மா நன்கு பாடுவாங்களே, எப்படி இருக்கிறார்கள், அவர் குரலைக் கேட்க வேண்டும் போலுள்ளது என்றாள்.

எனது 6 வயது பெண், பாட்டி பாடுவதை அடிக்கடி மொபைலில் ரெக்கார்டு பண்ணுவாள். ஏதாவது இருக்கிறதா எனப் பார்க்கிறேன் என்று சொல்லி ஒரு ரெக்கார்டிங்கை ear phone-இல் கேட்கும்படியும் தான் ஸ்கேன் எடுப்பதாகவும் கூறினாள்.

கேட்ட தோழி “என்னடி பாட்டு என்றாய், அம்மா ஏதோ படிக்கிறார்கள்” எனக் கேட்டாள். அம்மா தினமும் பரம்பொருள் என்ற புத்தகத்தைப் படிப்பார்கள். அதை என் பெண் ரெக்கார்டு செய்திருக்கிறாள். வேறு ரெக்கார்டிங் இல்லையே எனச் சொல்ல, பரவாயில்லை நீ ஸ்கேன் முடிக்கும் வரை நான் இதையே கேட்கிறேன் என்று கூறியபடி ஸ்கேனுக்குத் தயாரானாள்.

இவள் காதில் பரம்பொருள் கேட்டுக்கொண்டிருக்க, அவளுடைய தோழி **Jell** தடவி ஸ்கேன் செய்ய எத்தனித்த போது, திடீரென்று வயிற்றிலிருந்த குழந்தை பலமாக எட்டி உதைக்க, வலி தாளமுடியாமல் வாய்விட்டு கத்திவிட்டார். அவளை சோதனை செய்த தோழி பிரசவ நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்தாள். ஸ்கேனை நிறுத்தி விட்டு உதவிக்கு ஆட்களை அழைத்து அவசரமாக அவளை லேபர் ரூமுக்குக் கொண்டுபோனார்கள்.

நொடியில் சுகப்பிரசவத்துடன் பெண் குழந்தை பிறந்தது. வயிற்றிலுள்ள குழந்தையின் அசைவை உணர முடியவில்லை, உதைக்கவில்லை என்ற மனக்கவலையைப் பரம்பொருள் வாசிப்பு உடனே தீர்த்து வைத்ததுமட்டுமல்லாமல், கேட்டுக் கொண்டிருக்கும்போதே குழந்தை உதைத்து அந்த க்ஷணமே பிரசவமும் நல்ல முறையில் முடிந்தது. அசைவற்றது பரம்பொருளின் அருளால் அசைவு பெற்று உலகில் ஜனித்தது.

அன்னை பிரச்சனை தீர்ப்பது மட்டுமல்லாமல் அதனுடன் உபரியாக வாய்ப்பையும் அருளுவார் என்ற நம் குருநாதர் கர்மயோகியின் வாய்மொழியை இந்நிகழ்ச்சி சத்தியமாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

தோழிகள் இருவரும் பகவான் ஸ்ரீ அரவிந்தரின் அருளுக்குப் பக்தியுடன் நன்றி கூறினர்.

அவர் வாசிக்கக் கேட்ட கட்டுரையின் விவரத்தை சில நாட்களுக்குப்பின் விசாரித்த பொழுது தெரியவந்த விஷயம், அன்று ஏப்ரல் 24, ஸ்ரீ அன்னை புதுவைக்கு நிரந்தரமாகத் தங்க வந்த தரிசன நாள் என்பது. அவர் வாசிக்கக் கேட்ட கட்டுரை பரம்பொருள் முதல் பாகத்தில் கடைசியாக உள்ள "ஜீவாத்மாவுக்கு இறைவன் வகுத்த வழி".

பரம்பொருள் புத்தகத்தில் உள்ள லைப் டிவைன் கருத்துக்களை வாசிப்பது நம் சூட்சுமச் சூழலை உயர்த்தும். நம் வாழ்வில் ஏற்படும் சுருக்கங்களை நேராக்கி சுகம் தரும் என்பதற்கு இவ்வனுபவமும் சான்று.

ஸ்ரீ அரவிந்த மம சரணம்.



## அன்னை இலக்கியம்

## மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 11. கல்யாணம்

கல்யாணத்தில் பொதுவாக முதல் நாள் நிச்சயதார்த்தம் அல்லது வரவேற்பு இருக்கும். மறுநாள் காலையில் கல்யாணம் நடக்கும். எனக்கும், ஜமுனாவிற்கும் கல்யாணம் மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்யாணத்திற்கு முதல் நாள் மாலை வரை உற்சாகமாக எங்களோடு பேசிக் கொண்டிருந்த தாத்தா, ஏதோ ஒரு போன் வந்தபின் இறுக்கமாகி விட்டார். மதுரை மாமாவைத் தனியாக அழைத்துச் சென்று நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்.

மறுநாள் காலையிலும், கல்யாணத்தின் போதும் இறுக்கமாக, வேறேதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் தாத்தா.

கல்யாண மேடை மிக மிக எளிமையாகத்தான் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இருநூறு பேர்களுக்கும் குறைவாகவே வந்திருந்தனர்.

'காலை ஒன்பது முதல் பத்தரை வரை முகூர்த்தம். நான் சரியாக எட்டரைக்கெல்லாம் வந்து விடுவேன்' என்று கூறியிருந்தார் ஸ்ரீ மாசிலாமணி சுவாமிகள். அவர் கேட்டிருந்த கிரியைப் பொருட்கள் முதல் நாளிரவே வந்து விட்டன. பொதுவான திருமண தெய்வங்கள் தவிர குடும்ப தெய்வம், குல தெய்வம், சாதி தெய்வம் என்று ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி பையில் சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன.

மஞ்சள் நிற நூல் சேலை உடுத்தி நான் தாலி கட்டுவதற்காக மணப்பெண் அறையில் காத்துக் கொண்டிருந்தாள் ஜமுனா. தாலி கட்டியபின் பட்டு சேலைக்கு மாறிக் கொள்வாள்.

கவர்னசத்தை தனக்கு கட்டுப்படுபவர்களையெல்லாம் அதிகாரம் செய்து கொண்டிருந்தார். எட்டேமுக்கால் அளவில் மதுரை அத்தை ‘சுவாமிகளை இன்னமும் காணோமே’ என்று மெல்ல குரல் எழுப்பினார்.

‘அவர் எப்பேர்ப்பட்ட மகான்! தேங்காய் மூடி புரோகிதரா என்ன!’ என்றார் கவர்னசத்தை.

ஒன்பது மணி ஆனதும் கவர்னசத்தை ரகசியமாக என்னிடம் வந்து ‘ஒரு போன் பண்ணி பார்க்கலாமா?’ என்று கேட்டார். நான் போன் செய்தேன். சுவாமிகளின் போன் அணைக்கப்பட்டிருந்தது.

‘வண்டியில் வந்து கொண்டிருப்பார்’ என்றார் கவர்னசத்தை.

மணப்பெண் அறையிலிருந்த ஜமுனாவிற்கு போன் செய்தேன். ‘தாத்தாவிடம் சொல்லி புரோகிதர் இல்லாமல் கல்யாணம் நடத்தி விடலாமா என்று ஜவுளி அண்ணி கேட்டார். எனக்கும் சரி என்று தோன்றுகிறது’ என்றேன்.

‘அட, என்ன அவசரம் உங்களுக்கு!’ என்றாள் ஜமுனா.

‘நேரமாகிறதே’ என்றேன்.

‘எந்த ஜென்மத்திலும் ஏதோ ஒரு வகையில் உங்களுக்கு நான் உறவாகத்தான் இருப்பேன். அதனால் பொறுமையாக இருங்கள்!’ என்றாள் ஜமுனா.

அழைக்கப்பட்டிருந்த எல்லோரும் வந்து மண்டபத்தில் கூடி விட்டிருந்தனர். மணமக்கள் இல்லாத மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். என்ன செய்வதென்று எவருக்கும் தெரியவில்லை.

ஒன்பதரைக்கு மேல் கவர்னசத்தையால் பொறுக்க முடியவில்லை. மதுவண்ணாரை அதட்டி, பின் கெஞ்சி, சுவாமிகள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். பத்து மணிக்கு திரும்பி வந்தார் மதுவண்ணார்.



‘நல்ல ஆளைப் பார்த்து விட்டீர்கள்!’ என்று கவர்னசத்தை-யிடம் சொல்லிவிட்டு ‘தாத்தா, மினிஸ்டர் தமிழடியான் ஏதோ ஒரு பெரிய திட்டம் ஆரம்பிக்கிறாராம். இந்த சுவாமி அவர் வீட்டிற்கு காலையில் நான்கு மணிக்கே போய்விட்டது. இன்னமும் அங்கேதான் இருக்கிறது. நேரில் பார்த்து விசாரித்தால் ‘வேறு யாரையாவது வைத்து கல்யாணத்தை நடத்திக் கொள். தலைவர் எனக்கு வைர மோதிரம் போட்டிருக்கிறார். இப்போதைக்கு இங்கிருந்து நகர முடியாது’ என்று பேசுகிறது. திரும்பி வந்து விட்டேன்’ என்றார்.

எல்லோரும் கவர்னசத்தையைப் பார்க்க, அத்தனை சக்தியை அவரால் தாங்க முடியவில்லை. ‘ஏம்பா, அந்த அயோக்கியனுக்கு பின்னந்தலையில் ஒரு அறையாவது கொடுத்து விட்டு வந்திருக்கக் கூடாது? சாதாரண புரோகிதரை கூப்பிட்டிருந்தால் கூட கல்யாணம் இந்நேரம் முடிந்திருக்குமே! விசேஷமான ஆள் என்று இவனை நம்பினேனே’ என்று புலம்பிய கவர்னசத்தை திடீரென சன்னதம் வந்தவர் போலாகி ‘பரமா, நீ சொன்னதுதான் சரி. சாரமே இல்லாத சடங்கு எதற்கு? நாம் எந்த நேரத்தை நல்ல நேரம் என்று நினைக்கிறோமோ, அது நல்ல நேரம்தான். நடுவில் எந்த புரோக்கரும் வேண்டாம், புரோகிதரும் வேண்டாம். நீ தாலியைக் கட்டு’ என்றார்.

‘தாலி கட்டுவது கூட தேவையில்லைதான். ஆனால், திருமணப் பதிவாளர் ஒத்துக் கொள்ள மாட்டாரே. ஏதாவது அடையாளம் கேட்பாரே!’ என்று கூறிச் சிரித்தாள் ஜமுனா.

‘கல்யாணம் இல்லாமல் சேர்ந்து வாழலாம் என்று கூட இவள் சொல்வாள் போலிருக்கிறதே’ என்று குத்தலாகச் சொன்னார் கவர்னசத்தை.

‘அதை ஜமுனா ஏற்கனவே சொல்லிவிட்டாள் கவர்னசத்தை’ என்றேன்,

வாய்விட்டுச் சிரித்தாள் ஜமுனா.

‘கல்யாணப் பெண் போல லட்சணமாக வெட்கப்பட்டு தலையைக் குனிந்து கொண்டிரு’ என்று மதுரை அத்தை

ஜமுனாவை அதட்டி விட்டு நிமிர்ந்திருந்த அவளது தலையை அழுத்திக் குனிய வைத்தார்.

நான் எந்த மந்திரமும், சடங்கும் இல்லாமல் தாலி கட்டி ஒரு முடிச்சு போட, மற்ற முடிச்சுகளை யசோதா அக்கா போட்டார்.

விருந்தினர்கள் ஒவ்வொருவராக வந்து கைகொடுத்து, போட்டோ எடுத்துக் கொண்டு, வண்ணக் காகிதம் சுற்றப்பட்ட பரிசைத் தந்துவிட்டுச் சென்றனர். பல சுவர் கடிகாரங்களும், போட்டோ சட்டகங்களும் கல்யாணப் பரிசாக வந்திருந்தன.

கம்பெனிக்கு உதிரி பாகங்கள் செய்து தரும் முருகவேள் கல்லில் செதுக்கிய உள்ளங்கையளவு பிள்ளையார் சிலை ஒன்றைப் பரிசாகத் தந்தார்.

‘அழகாக இருக்கிறது. எங்கு வாங்கினீர்கள்?’ என்று கேட்டேன்.

‘நானேதான் செதுக்கினேன். சிற்பம் செய்வது என் பொழுதுபோக்கு’ என்றார் முருகவேள்.

அருகே நின்றிருந்த என் நண்பன் ஆடிட்டர் தினகரன் ‘யந்திர வேலைகளையும் நன்றாகத்தான் செய்கிறார்’ என்றான்.

‘இவரை உனக்குத் தெரியுமா?’ என்று கேட்டேன்.

‘மண்டபத்தில்தான் தெரிந்து கொண்டேன். என் பழைய ஸ்கூட்டரில் விசித்திரமான சத்தம் வந்து கொண்டிருந்தது. பல மெக்கானிக்குகளிடம் காட்டியும் சரியாகவில்லை’ என்றான் தினகரன்.

‘அதனால்தானே புது மோட்டார் சைக்கிள் வாங்க முடிவெடுத்தாய்?’ என்றேன்.

‘பார்க்கிங் இடத்தில் நான் ஸ்கூட்டரை நிறுத்தும்போது, இவரும் சைக்கிள் நிறுத்த வந்தார். எதையோ கழட்டி என்னவோ செய்தார். சத்தம் நின்று விட்டது’ என்ற தினகரன் ஒரு பார்சலை கொடுத்துவிட்டு விடை பெற்றான்.



ஜமுனா சுந்தரத்தைப் பார்த்தாள். அவன் ‘வாருங்கள் சார், சாப்பிடலாம்’ என்று கூறி முருகவேளையும். தினகரனையும் அழைத்துச் சென்றான்.

தாத்தா எங்களிடம் ‘நான் அவசர வேலையாக பெங்களூருக்குப் போகிறேன். இரண்டு நாட்களில் வந்து விடுவேன்’ என்றார்.

‘அப்படி என்ன அவசரம்? நாளைக்குப் போகலாமே’ என்றார் காபி அண்ணி.

‘நீ பேசாமலிரு. தாத்தாவிற்கு தெரியாதா’ என்றார் ஜவுளி அண்ணி. இருந்தாலும் எல்லோருக்குமே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

தாத்தா கிளம்பி விட்டார். என்ன சிக்கல் என்று தெரியவில்லை. மர்மமாக இருந்தாலும், ஜமுனாவின் அருகாமையினால் அதை சில நிமிடங்களில் மறந்துவிட்டேன்.

## 12. மான்மியம்

தாத்தா கிளம்பிச் சென்ற பின் மண்டபமே காலியாகி விட்டது போலிருந்தது. பனிரெண்டு மணிக்கு மண்டபத்தில் தாத்தா குடும்பத்தினரையும், மதுரை மாமா குடும்பத்தினரையும் தவிர எவருமே இல்லை.

‘கோவிலுக்குப் போய்விட்டுத்தான் வீட்டிற்குப் போக வேண்டும் என்று சொன்னீர்களே கவர்னசத்தை’ என்றேன்.

‘நம் வீடுதான் கோவில். பரமா, இனி எந்தக் கோவிலுக்கும் போக வேண்டாம். எந்த பூசாரியின் உறவும் வேண்டாம். மாசிலாமணியால் நான் சபையில் பட்ட அவமானம் போதும். இனி எல்லோரையும் ஓட, ஓட விரட்டி நான் யார் என்று காட்டுகிறேன்’ என்று வெறுப்போடு சொன்னார் கவர்னசத்தை.

முதலில் அண்ணிகள் வீட்டுக்குச் சென்று விட்டனர். அரைமணி நேரம் கழித்து நாங்கள் கிளம்பினோம்.

வீட்டு வாசலில் காத்திருந்த அண்ணிகள் தலைமையில் நாங்கள் வீடு புகுந்தோம்.

அண்ணிகள் ஆரத்தி எடுத்தபின் 'புதுப் பெண் வீட்டிற்கு வருகிறாள். யாராவது பாடுங்களேன்' என்றார் மதுரை அத்தை.

எல்லோரும் சிரித்தார்களே தவிர எவரும் பாட முன்வரவில்லை. சற்றுப் பொறுத்து 'நான் பாடுகிறேன்' என்றார் கவர்னசத்தை.

எச்சரிக்கை அடைந்த ஜவுளி அண்ணி 'பாட்டெல்லாம் எதற்கு?' என்றார்.

'பாட்டு வேண்டாம். உள்ளே போகலாம்' என்றார் காபி அண்ணி.

'ஒரு வேடிக்கைதானே. நீங்கள் பாடுங்கள்' என்றார் மதுரை அத்தை, என் மாமியார்.

'புதுப் பெண்ணுக்கு மாமியார் இங்கில்லை. என்னையே மாமியாராக நினைத்துக் கொண்டு செட்டி நாட்டு மாமியார் மான்மியம் பாடுகிறேன். பெரிய பாட்டு. சில வரிகள் பாடுகிறேன்' என்றார் கவர்னசத்தை.

'வேண்டவே வேண்டாம்' என்று அண்ணிகள் இருவரும் கிட்டத்தட்ட கூவினர்.

ஆனால், கவர்னசத்தை பாட ஆரம்பித்துவிட்டார்.

நல்லாத்தான் சொன்னாரே நாராயணன் செட்டி!

பொல்லாத பொண்ணாகப் பொறுக்கி வந்து வச்சாரு
வல்லூறைக் கொண்டு வந்து வாசலிலே விட்டாரு

கல்லாப் பொறந்ததையும் கரும்பாம்புக் குட்டியையும்
செல்லாப் பணத்தினையும் செல்ல வைச்சு போனாரு

கண்ணா வளர்த்த பிள்ளை காலேசிலே படிச்சு வந்து



மண்ணாளும் ராசாபோல் வளர்ந்ததடி என் வீட்டில்!

வந்த நாள் தொட்டு என் மகனைப் பிரிச்சு வைச்சா
எந்த நாள் பாவமோ இப்ப வந்து சுத்துதடி

தலைகாணி மந்திரத்தால் தாயை மறக்க வச்சா
மலையரசி, காளி, எங்க மாரியம்மா கேக்கோணும்!

ராசாக் கிளி போலே நல்ல பிள்ளை பெத்தெடுத்தேன்
பேசாக் கிளியாச்சு! பெண்டாட்டி நினைவாச்சு!

பாருடா என்று சொன்னா பாக்காம போறாண்டி!
கேளுடா என்று சொன்னா கேக்க மனம் இல்லையடி!

சட்டென்று அந்த இடம் அமைதி ஆயிற்று. கலைந்த சூழலை எப்படி எதிர்கொள்வது என்று எவருக்கும் தெரியவில்லை.

கோபத்துடன் காபி அண்ணி 'என்ன பாட்டு இது!' உரத்த குரலில் கூற, ஜவுளி அண்ணியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. மதுரை அத்தை விசும்ப ஆரம்பித்தார்.

அப்போது ஜமுனா வாய்விட்டு சிரித்தாள். 'இது என்ன அசந்தர்ப்பமான சிரிப்பு! பாட்டு இவளுக்கு புரியவில்லையா!' என்பது போல அனைவரும் ஜமுனாவைப் பார்த்தனர்.

'கவர்னசத்தை! இந்த பாட்டு யார் எழுதியது தெரியுமா?' என்று கேட்டாள் ஜமுனா.

'எனக்குத் தெரியாதே அம்மா' என்றார் கவர்னசத்தை.

'மருமக்கள் சொத்துரிமை முறையில் இருக்கும் சிக்கலைப் பற்றி கவிமணி ஒரு கேலிப் பாட்டு எழுதினார். நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்று அதற்கு பெயர். அதைப் பார்த்து இங்கே இருக்கும் திருமண பழக்க,வழக்கத்தைக் கேலி செய்து கவியரசர் செட்டி நாட்டு மாமியார் மான்மியம் எழுதினார்.'

'கேலிப் பாட்டு என்று தெரியும். நான் வேறென்ன கண்டேன்! தப்பாக நினைத்துக் கொள்ளாதே' என்றார் கவர்னசத்தை.

'இதற்கு எதிர் பாட்டு இருக்கிறது கவர்னசத்தை. செட்டி நாட்டு மருமகள் மான்மியம் என்று பெயர். நானும் உங்களைப்

போல கொஞ்சம் பாடுகிறேன். கேளுங்கள்' என்றாள். எல்லோரும் திகைப்புடன் ஜமுனாவைப் பார்க்க அவள் பாடத் தொடங்கினாள்.

அவ கெடக்கா சூப்பநகை; அவ மொகத்தே யார் பாத்தா!
அவுக மொகம் பாத்து அடியெடுத்து வச்சேன் நான்!

தலைகாணி மந்திரமாம்; சங்கதியைக் கேளுங்கடி!
பொண்டாட்டி சொல் கேக்க புத்தியில்லா ஆம்பிளையா?

வீட்டு மருமகளா விளக்கேத்த வந்தவளை
கொட்டுகிறா கொட்டு, தேள்கூட கொட்டாது!

நாமா இருந்த மட்டும் நாலுழக்கு பாலூத்தி
தேனா கொடுத்திவளை திமிர் புடிக்க வச்சிருக்கோம்!

போனா போகட்டுமினு பொறுத்துக் கெடந்தாக்க
தானானா கொட்டுகிறா; தடம்புரண்டு ஆடுகிறா!

பாக்கத்தான் போறேண்டி; பாக்கத்தான் போறேன் நான்!
கேக்கத்தான் போறேண்டி; கேக்கத்தான் போறேன் நான்!

ஒருத்தருக்கு எம்மனசை ஒழுங்கா நான் தந்திருந்தா
இருக்கிற தெய்வமெல்லாம் எனக்காகக் கேக்கோணும்!

எல்லா பெண்களும் சிரித்தபடி கைதட்டினர். ஏதோ தங்களுக்கே நடந்து விட்ட அநியாயத்திற்கு நீதி கிடைத்து விட்டது போல மகிழ்ந்தனர்.

கவர்னசத்தையின் முகம் சுருங்கி விட்டது.

'கேலிப் பாட்டு என்று உங்களுக்கு தெரியாதா கவர்னசத்தை? தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டாம்' என்று புன்சிரிப்புடன் கூறினாள் ஜமுனா.

மதுரை அத்தையின் முகத்தில் பெருமிதம் எழுந்தது.

ஜவுளி அக்காவும், காபி அக்காவும், ஜமுனாவை அணைத்து கொண்டனர். 'நாங்கள் வரும்போதும் இப்படித்தான் பாடி கவர்னசத்தை அவமானப்படுத்தினார். எங்களுக்கு உன்னைப் போல எதிர்பாட்டு பாடத் தெரியாமல் போய்விட்டது' என்று



ஜமுனாவின் காதோடு மெல்லிய குரலில் கூறினார் காபி அண்ணி.

அதற்கு பின்பு கவர்னசத்தை அளவோடு பேச ஆரம்பித்துவிட்டார். ஜமுனாவை பார்க்க நேர்ந்தால் பதறிப் போய் தன்னறைக்குள் புகுந்து மறைந்து கொண்டார்.

'புதுப்பெண் மீனாட்சியா, காளியா?' என்று ஒரு பெண் கேட்க அனைவரும் சிரித்தனர்.

'இனி ஜமுனா வைத்ததுதான் சட்டம். புது வெள்ளம் வந்தால் பழைய நீர் வடிய வேண்டியதுதான்' என்றார் மற்றொரு பெண்.

அண்ணிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மலர்ந்திருந்த அவர்களது பால்முகங்கள் ஒரு கணம் சுருங்கி, திரிந்து மீண்டன.

அனைவரும் உள்ளே நுழைந்தோம். ஆண்கள் கூடத்தில் உட்கார்ந்து கொள்ள பெண்கள் உள்ளறைக்குச் சென்று அமர்ந்து கொண்டனர்.

சம்பிரதாயமான பேச்சும், சம்பந்தமற்ற பேச்சுமாக இரண்டு மணி நேரம் கழிந்தது.

மாலை நான்கு மணிக்கு மதுரை மாமா புறப்பட்டார். 'இனி ஜமுனா உங்கள் வீட்டுப் பெண். நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். நாங்கள் இன்றிரவு ஊருக்குக் கிளம்புகிறோம்' என்றார்.

எல்லோரும் அதிர்ச்சி அடைந்தோம். 'அதற்குள்ளாகவா?' என்று காபி அண்ணி கேட்டார்.

'இன்னும் பல சடங்குகள் செய்ய வேண்டுமே. என்ன அவசரம்?' என்றார் ஜவுளி அண்ணி.

'நாளை போகலாம் என்றால் இன்றே போகலாம் என்று பிடிவாதம் பிடிக்கிறார்' என்றார் மதுரை அத்தை.

'கவர்னசத்தை பாடிய பாட்டுக்கு நாங்கள் மன்னிப்பு கேட்கிறோம்' என்று இரண்டு அண்ணிகளும் கூறினர்.

‘அதெல்லாம் ஒன்றுமில்லை. வேடிக்கை பாட்டுதானே!’ என்றார் மதுரை மாமா.

‘இன்னும் மூன்று நாட்கள் இருப்பீர்கள் என்று நினைத்தோம்! அப்படி என்ன அவசரம்?’ என்றார் காபி அண்ணி.

‘எங்களுக்கும் இருக்க ஆசைதான். போக வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிவிட்டது’ என்றார் மதுரை மாமா.

‘நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்’ என்று அண்ணிகள் கூறினர்.

மாமா அண்ணார்களிடம் தனிமையில் சற்று நேரம் பேசி விட்டு விடைபெற்றார்.

‘காரில் கொண்டு போய் விடுதியில் விட்டு வா’ என்று புருஷண்ணார் கூறினார். மாமா குடும்பத்தினரை நானும் ஜமுனாவும் காரில் அழைத்துச் சென்று விட்டோம். பழைய பயணச் சீட்டுகளை ரத்து செய்துவிட்டு, புது சீட்டுகள் எடுத்து மதுரைக்கு ரயிலேறும் வரை கூடவே இருந்தோம்.

## 13. புறப்பாடு

வீடு திரும்பும் போது லேசாக இருட்டத் தொடங்கிவிட்டிருந்தது.

‘பயமாக இருக்கிறதா?’ என்று ஜமுனாவிடம் கேட்டேன்.

சிரித்தவள் ‘உங்கள் முகத்தைப் பார்த்தால்தான் பயந்து போனவர் போலிருக்கிறீர்கள்’ என்றாள்.

நாங்கள் வீட்டிற்குள் நுழைந்த போது வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது.

வாசலில் நானும் ஜமுனாவும் நின்று கொண்டு அழைப்பு மணியை சில முறை அழுத்தினோம். எவரும் கதவைத் திறக்கவில்லை.



‘எல்லோரும் ஏ.சி. அறைகளில் இருப்பார்கள். அதனால் சத்தம் கேட்டிருக்காது. பல சமயங்களில் எனக்கு இப்படி நிகழ்ந்திருக்கிறது’ என்றேன்.

ஜமுனா புன்னகைத்தாள்.

நான் என்னிடமிருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்தேன். அவளது கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்று கூடத்தில் உட்கார வைத்துவிட்டு மின்விசிறியைப் போட்டு விட்டேன். அது ஓடவில்லை. ‘மின்சாரம் இல்லை. அதனால்தான் அழைப்பு மணி சத்தம் கேட்கவில்லை. இல்லையென்றால் எல்லோரும் வாசலுக்கு வந்திருப்பார்கள். மாடி அறைகளில்தான் அண்ணிகள் இருப்பார்கள். போய்ப் பார்க்கலாம் வா’ என்று ஜமுனாவை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றேன்.

மாடிப்படி ஏறுமிடத்திலிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் தன் கூந்தலை திருத்திக் கொண்டு, ஒப்பனையை லேசாக சரி செய்து கொண்டாள் ஜமுனா. படிகளுக்கு வலிக்காமல் ஏறி வந்தாள். மாடி அறைக்குள் நுழைய யத்தனித்த போது உள்ளே அண்ணார்களும், அண்ணிகளும் பேசுவது தெளிவாகக் கேட்டது.

கவர்னசத்தை ‘இனி இந்த வீட்டில் இருக்க மாட்டேன்’ என்று கோபத்தோடு சொல்லிவிட்டு போய்விட்டாரே! எங்கே போயிருப்பார்?’ என்றார் ஜவுளி அண்ணி.

‘இரண்டு நாள் அங்கே, இங்கே என்று அலைந்து விட்டு திரும்ப வந்துவிடுவார். யாரும் இடமோ, வேலையோ கொடுக்கமாட்டார்களே. ஒரு ஆள்தான் என்றாலும் செலவு செலவுதானே? ஜமுனா பாடியது போல நாமா இருந்த மட்டும் நாலுழக்கு பாலூத்தி தேனா கொடுத்திவளை திமிர் புடிக்க வச்சிருக்கோம்’ என்று கூறி வாய்விட்டு சிரித்தார் காபி அண்ணி.

‘பரமன் தனியாளாக இருந்த வரை வீட்டுச் செலவிற்கு நாம் அவனிடம் எதுவுமே கேட்டதில்லை. இனி செலவில் மூன்றில்

ஒரு பங்கு அவன் தந்தால்தான் அவனுக்கு கௌரவமாக இருக்கும்' என்றார் மதுவண்ணார்.

'அவனால் அவ்வளவு தர முடியாது என்று நினைக்கிறேன். இப்போதுதானே சொந்தமாக சாப்ட்வேர் எழுதி ஏதோ சம்பாதிக்க ஆரம்பித்திருக்கிறான்' என்றார் ஜவுளி அண்ணி.

'இருந்தாலும் நியாயம் என்று ஒன்று இருக்கிறதே! அவன் குடும்பத்து செலவை அவன்தானே பார்த்துக் கொள்ள வேண்டும்? என் குடும்பத்திற்காகவா கேட்கிறேன்' என்றார் மதுவண்ணார்.

அண்ணார் குடும்பம் வேறு, என் குடும்பம் வேறா? அண்ணாரின் சொற்கள் எனக்கு வருத்தத்தைத் தந்தன. நான் இதுவரை அப்படி நினைத்ததே இல்லையே.

'அவனால் தர முடிகிற வரை, அவன் பங்கை நானே கொடுத்து விடுகிறேன்' என்றார் ஜவுளி அண்ணி.

பரமனும், ஜமுனாவும் நம் குடும்பம்தான் என்று அண்ணி ஏன் சொல்லவில்லை?

நான் உள்ளே நுழைவதா, வேண்டாமா என்று தயங்கி வாசலில் நின்றேன்.

'நம் குழந்தைகளும் வளர்ந்து வருகிறார்கள். தனித்தனி அறை தேவைப்படும். பரமன் வேறு வீடு பார்த்துக் கொண்டால்தான் பரமனுக்கும், ஜமுனாவிற்கும் சந்தோஷமாக இருக்கும். புதிதாக கல்யாணம் ஆனவர்கள் இல்லையா?' என்றார் மதுவண்ணார்.

'இது நியாயமான பேச்சு. பரமனுக்கு மாதம் எவ்வளவு வரும்?' என்றார் புருஷண்ணார்.

'ஏதாவது வருகிறதா என்ன! தனியாக இருந்து குடும்பம் நடத்தினால்தான் நாம் எத்தனை சிரமப்படுகிறோம் என்பது அவனுக்குத் தெரியும்' என்றார் மதுவண்ணார்.



'ஒரு மணி நேரம் கம்ப்யூட்டரில் வேலை பார்த்தால் ஒன்பது மணி நேரம் கதை படிக்கிறான். அப்படியே நம் மாமனார் மாதிரி இருக்கிறான்' என்றாள் காபி அண்ணி.

'அப்படியானால் ஜமுனா அதிர்ஷ்டக்காரிதான்' என்றாள் ஜவுளி அண்ணி.

அண்ணிகள் சிரித்தனர்.

'மாமியார் கிருஷ்ண பக்தை. மருமகள் யாருடைய பக்தையோ?' என்று காபி அண்ணி சொன்னவுடன் மீண்டும் அனைவரும் சிரித்தனர்.

'வயதானதால் நம் தாத்தாவிற்கு பழைய புத்தி கூர்மை மழுங்கிவிட்டது. ஜமுனா வீட்டு மனிதர்கள் ஒன்றுமில்லாதவர்கள். இருபது பவுன் கூட தேறாது. அதுவும் பழைய நகைகள். பரமன் நிலை பரிதாபம்தான்' என்றார் மதுவண்ணார்.

ஜமுனாவின் மனநிலையை நினைத்து எனக்குக் கவலையாக இருந்தது. என் கண்கள் கசிவது போலிருந்தது. ஜமுனாவைப் பார்த்தேன். அவளோ என் கையைப் பற்றிக் கொண்டு புன்னகைத்தாள். பின் கீழே இறங்கத் திரும்பினாள். நான் அவள் கையை சிறிது அழுத்தி நிறுத்தினேன்.

'மது சொல்வது சரிதான். பரமன் தனிக் குடித்தனம் போனால்தான் பொறுப்பு வரும். சம்பாதிக்கும் ஆர்வம் வரும்' என்றார் புருஷண்ணார்.

'சுந்தரம் இப்போதுதான் படிப்பை முடிக்கப் போகிறானாம். வேலை தேடி நேராக சென்னைக்குத்தான் வருவான். அப்புறம் நம் வீடு இலவச சத்திரமாகி விடும்' என்றார் மதுவண்ணார்.

'தனிவீடு பார்த்துப் போனால் பரமனுக்குக் கஷ்டமாக இருக்குமே' என்றார் ஜவுளி அண்ணி.

'தேவைப்பட்டால் கொஞ்ச காலத்திற்கு நம்மால் முடிந்ததை மாதாமாதம் கொடுத்து விட வேண்டும். மளிகை சாமான் கூட மாதாமாதம் வாங்கித் தந்துவிடலாம். ஆனால் இங்கே இருக்க

வேண்டாம். சின்னச் சின்ன பிரச்சனைகள் வந்து பெரிதாகி விடும். வெளியே போனால் நான் வைர நெக்லஸ் போடுவேன். ஜமுனாவிற்கு மனக் கஷ்டம் வரும். பாவம், இல்லாத சின்னப் பெண். நம் வீட்டுப் பெண் மனம் புண்பட நாமே காரணமாகக் கூடாது' என்றார் காபி அண்ணி.

அவர்கள் பேச்சு எனக்குக் குழப்பத்தை தந்தது. எனக்கு ஆதரவாகப் பேசுகிறார்களா, எதிர்ப்பாகப் பேசுகிறார்களா என்று புரியவில்லை.

என் கைகளை விட்டுவிட்டு பல படிகள் இறங்கிய ஜமுனா, தன் கொலுசு சத்தம் மற்றவர்களுக்கு நன்றாக கேட்கும்படி தரை அதிரப் படியேறினாள்.

அறையில் சட்டென மௌனம் பரவியது. நான் அறைக் கதவை மெல்லத் தட்டினேன்.

'திறந்துதான் இருக்கிறது' என்று புருஷண்ணார் குரல் கேட்டதும் கதவைத் தள்ளித் திறந்தேன். உள்ளே சென்றோம்.

எல்லோரும் எங்களை விரியும் புன்னகையோடு வரவேற்றனர்.

அண்ணிகள் ஜமுனாவைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தனர்.

ஜவுளி அண்ணி 'என்ன அழகு! சிலை போல இருக்கிறாயடி' என்று கூறி அவளை தன்னருகே இழுத்து அணைத்து வலது கன்னத்தில் முத்தமிட்டார்.

காபி அண்ணி 'அக்கா, உங்கள் கண்ணே பட்டுவிடும்' என்று கூறிவிட்டு தன் கண்ணிலிருந்து சிறிது மையெடுத்து ஜமுனாவின் முகத்தில் வைத்து விட்டு 'அக்கா சொன்னது சத்தியம்' என்று கூறி ஜமுனாவின் இடது கன்னத்தில் முத்தமிட்டார்.

ஜமுனாவின் கண்களில் நீர் துளிர்த்தது. இருவரையும் அணைத்துக் கொண்டாள்.



மின்சாரம் வந்து ஏ.சி. ஓட ஆரம்பித்தது. வசதியாக உட்கார்ந்து கொண்டு காலையில் நடந்த திருமணத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

ஜமுனா அதிகம் பேசாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின் ஜவுளி அண்ணியிடம் 'அக்கா, இவர் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறார். நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது' என்று ஆரம்பித்தாள்.

அனைவரின் முகத்திலும் புன்னகை மறைந்து தீவிரம் எழுந்தது.

'சொல்லுப்பா' என்றார் ஜவுளி அண்ணி.

நான் விழித்தேன்.

'இவர் நினைப்பு என்ன தெரியுமா? 'உங்களைப் போல எனக்கும் பொறுப்பு வர வேண்டுமானால் நான் தனியாக குடும்பம் நடத்திப் பார்க்க வேண்டுமாம். கொஞ்ச நாள் இங்கே இருந்தாலும் நீங்கள் என்னை ராணி போல நடத்துவதில் எனக்கு சொகுசு பழகிவிடுமாம். உடனே வேறு வீடு போக வேண்டும்' என்று நினைக்கிறார். உங்களிடம் சொல்லத் தயங்குகிறார்' என்றாள் ஜமுனா.

திகைத்தேன். மற்றவர்களும் திகைத்தனர்.

'அக்கா, நம்மைப் பற்றி பரமன் எவ்வளவு உயர்வாக பேசியிருக்கிறான்!' என்று மகிழ்ந்தார் காபி அண்ணி.

'இப்போது அதுவாடி முக்கியம்?' என்று காபி அண்ணியைக் கடிந்த ஜவுளி அண்ணி என்னிடம் 'உன்னைக் கிறுக்குப் பிள்ளை என்று விளையாட்டாக சில சமயம் கேலி செய்வேன். அதை உண்மையாக்கி விடுவாய் போலிருக்கிறதே' என்றார் ஜவுளி அண்ணி.

'என்னடா பரமா? நீ அவ்வளவு பெரிய ஆளாகி விட்டாயா? ஜமுனா சின்னப் பெண்' என்றார் புருஷண்ணார்.

‘உடனே எங்கேடா போவாய்? வீடு பார்க்க வேண்டாமா? பணம் வேண்டாமா?’ என்றார் மதுவண்ணார்.

‘எல்லாமே யோசித்து வைத்து விட்டார். சூளைமேட்டில் தாத்தா வீடு இருக்கிறதாமே. அங்கே போகலாம் என்று நினைக்கிறார்’ என்றாள் ஜமுனா.

‘அது ஓடு வேய்ந்த பழைய காலத்து வீடு. உனக்குப் பிடிக்குமோ என்னவோ?’ என்றார் புருஷண்ணார்.

‘மதுரையில் என் அப்பா வீடும் அப்படிப்பட்ட வீடுதான். ஓடாக இருந்தாலும், கூரையாக இருந்தாலும் நம் வீடு’ என்றாள் ஜமுனா.

‘இது நல்ல யோசனையாகத்தான் இருக்கிறது. வாடகை இல்லை. குடும்பம் நடத்த ஓரளவிற்கு சாமான்கள் இருக்கின்றன. பெரிய செலவு எதுவுமில்லை’ என்றார் மதுவண்ணார்.

‘இன்றே கிளம்புகிறோம்’ என்றாள் ஜமுனா.

‘இது என்ன! உன் அப்பாவும் திடீரென்று இன்றே கிளம்பிப் போனார். நீயும் அப்படியே பேசுகிறாய். பேசி வைத்துக் கொண்டு இப்படிச் செய்கிறீர்களா? இன்றே போக நீ சொல்லும் காரணங்கள் எதுவும் நம்பும்படியாக இல்லை’ என்ற ஜவுளி அண்ணி ‘என்ன நடந்தது? இவர்கள் மனம் நோகும்படி ஏதாவது பேசி விட்டீர்களா? உள்ளதை சொல்லுங்கள்’ என்று அண்ணார்களைப் பார்த்துக் கேட்டார்.

‘இது பரமனின் வீடும்கூட. நாங்கள் யார் அவனைப் போகச் சொல்ல?’ என்றார் புருஷண்ணார்.

‘அப்படிப் பேச நாங்கள் என்ன அற்பர்களா?’ என்றார் மதுவண்ணார்.

‘பின்னே எதற்கு இவள் சூடான காபி காலில் கொட்டியது போல துடிக்கிறாள்?’ என்றார் காபி அண்ணி.



எப்போதும் மலர்ந்திருக்கும் ஜவுளி அண்ணியின் முகம் வாடி விட்டிருந்தது. ‘இருப்பதும், போவதும் உங்கள் விருப்பம். சில நாட்கள் இங்கே இருந்து விட்டுப் போகலாமே’ என்றார்.

‘தாத்தா வாங்கிய முதல் வீட்டில்தான் வாழ்க்கையை ஆரம்பிக்க இவர் நினைக்கிறார்’ என்றாள் ஜமுனா.

‘அப்படியானால் சரி. வேறெங்கும் போகவில்லையே. அதுவும் நம் வீடுதான். சாப்பிட்ட பின் காரில் கொண்டு விடுகிறேன்’ என்றார் மதுவண்ணார்.

‘இல்லை சின்னத்தான். வெளியே கடைக்குப் போக நினைத்தோம். அப்படியே சாப்பிட்டுவிட்டுப் போகிறோம்’ என்றாள் ஜமுனா.

‘புது ஜோடி வெளியே தனியே சாப்பிடப் போக நினைக்கிறார்கள்’ என்றார் மதுவண்ணார்.

‘சரி பரமன் விருப்பம். நாமென்ன செய்ய முடியும்? கல்யாணமானதும் மனைவி மூலம் தன் யோசனைகளைச் சொல்கிறான். பெரிய மனிதனாகிவிட்டான்’ என்றார் புருஷண்ணார்.

‘அண்ணி, இரண்டு மூன்று மாற்று உடைகளை மட்டும் இன்று எடுத்துப் போகிறோம். நாளை வந்து மீதியை எடுத்துக் கொள்கிறோம்’ என்றேன்.

எழுந்து வந்து என்னருகே அமர்ந்த ஜவுளி அண்ணி திடீரென அழ ஆரம்பித்தார். ‘அம்மா போல உன்னை வளர்த்தேன். பட்டு போல பார்த்துக் கொண்டேன். நீயோ என்னை விட்டுப் போக நினைக்கிறாய். அழுகைதான் வருகிறது’ என்றார்.

காபி அண்ணியின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

‘நல்ல நாளில் இதென்ன அழுகை? பார்த்துக் கொண்டேயிரு, எல்லாம் நல்லபடியாகத்தான் நடக்கும்’ என்றார் புருஷண்ணார்.

ஜவுளி அண்ணி சிறிது சமாதானமானார்.

‘நீயும் ஜவுளி அண்ணியோடு சேர்ந்து எதற்கெடுத்தாலும் அழ ஆரம்பித்து விட்டாய்’ என்று காபி அண்ணியிடம் மதுவண்ணார் சொன்னார்.

‘நான் ஜமுனாவிடம் இப்படியெல்லாம் சொல்லவே இல்லை’ என்று எல்லோரிடமும் கூற நினைத்தேன்.

ஆனால் ஜமுனாவின் ஏற்பாடு எனக்கு உள்ளூர பிடித்திருந்தது. மேலும் சற்று நேரம் கழித்து நான் விரும்பியபோதும், என்னால் செய்திருக்க முடியாத ஏற்பாடு இதுவே என்றும் தோன்றியது.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

## ஜீவிய மணி

*முழுப்பட்டினியில் செய்யும் கடும் வேலை உடலைவிட்டுப் பிரியும் தருவாயிலிலுள்ள உயிரை மீட்கும். அருளை அந்த ரூபத்தில் பிறர்க்குத் தருவது கொடுமை. பட்டினியால் உடல் பருப்பது* **Odema.** *பட்டினியால் உடல் மெலிவது* **famished exhaustion.** *பருத்த உடல் பட்டினியில் செய்யும் வேலையால் பிழைக்கும். மெலிந்த உடல் ஆசை பூர்த்தியாகும் ஆர்வத்தால் பிழைக்கும். அருள் அவ்வார்வமாக வருவது நல்லெண்ணம். கொடுப்பவர் கொடுக்க கொடுத்து வைத்தவராக இருக்க வேண்டும்.*

**கொடுமையும் அருளாகும். நல்லெண்ணமும் அருளாகும்**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

# சர்தார் வல்லபபாய் பட்டேல்

நேருவுக்கும், காந்திஜிக்கும் இல்லாத வலிமை பெற்றவர் வல்லபபாய். இந்தியா ஆயுதம் தாங்கிப் போராட்டமின்றி சுதந்திரம் பெறும் என பல மகான்கள் கூறியுள்ளனர். **House of Commons** இங்கிலாந்து பார்லிமெண்ட் அது தங்கள் உரிமையை இந்தியருக்கு மாற்ற சம்மதித்து தீர்மானித்தது. அதனால் புரட்சியும், போராட்டமும் விலகியது. அது சட்டமானால், அதே சட்டம் சிற்றரசர்கள் உரிமையை இந்தியாவுக்கோ, பாக்கிஸ்தானுக்கோ தர முடியாது. உரிமை அரசர்கட்குப் போயிற்று. முடிவு மூன்று விதமானது. 1) இந்தியாவோடு சேரலாம். 2) பாக்கிஸ்தானுடன் சேரலாம். 3) சுதந்திரமாக இருக்கலாம். பெருநில மன்னர்கள் நிஜாம், காஷ்மீர், மைசூர், திருவாங்கூர் அரசர்கள் சுதந்திரமாக இருக்கப் பிரியப்பட்டனர். பட்டேலின் வலிமை அவர்கள் மனத்தை மாற்றியது. 1950-இல் ஜனாதிபதி “இன்று இந்தியா என ஒன்றுண்டென்றால் அது பட்டேல் நமக்கு கொடுத்தது.” 565 குறுநில மன்னர்கள் இந்தியாவுடன் இணைந்தது சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய அத்தியாயம். பட்டேல் அதன் சிற்பி. 1947, ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திரம் வருமுன் 1946-இல் **September**-இல் தற்காலிக சர்க்காரில் நேரு தலைவராகவும், பட்டேல் உள்துறை மந்திரியாகவும் உள்ளபொழுது மௌண்ட்பேட்டன் மார்ச் ‘47-இல் வந்தார். பட்டேல் எழுதிய கடிதம் வைஸ்ராயிக்கு **rude** முரட்டுத்தனமாகப்பட்டு அதை ரத்துசெய்யும்படி மௌண்ட்பேட்டன் கேட்டார். பட்டேலுக்கு தவறாக அது புரியவில்லை. மௌண்ட்பேட்டன் நிலைமையை பட்டேல் அறிய, “பட்டேல், உங்கள் கடிதம் வாபஸ் செய்யப்படாவிட்டால் நான் இலண்டனுக்குக் கிளம்புகிறேன்” என்றார். பட்டேல் கடிதத்தைக் கிழித்து விட்டார். இந்தியா சுதந்திரம் பெற்றது.

- காரியம் முடிய வலிமை வேண்டும்.
- பலம், வலிமை செயல்படும், எழுத பேச வராது. எழுதினால் பலன் கொடூரமாக இருக்கும்.
- எழுத்தில் கொடூரம் காரியத்தைக் கெடுக்கும்.
- வலிமைக்குரிய இடம் போர்க்களம், எழுத்து நாகரிகமானது.

# தில்லாமுல்லு

**Wrong** என்பதை ராங்கி எனவும் **tricks**-யை திரிக்குசு எனவும் **hearing**-யை ஈரங்கி எனவும் தமிழ் வழக்கு ஏற்றுக் கொண்டுள்ளது. அல்ப ஆதாயம், அல்ப சந்தோஷம் என இவற்றை அறியும் மக்கள் அறியாத தத்துவம், வாழ்வின் பெரும் சட்டம். யோக அதிர்ஷ்டம் ஒன்றுண்டு: அல்பம் அரச பதவியையும், அவசரப்பட்டு இழக்கும். இளம் வயதில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்ற அன்னை பகவான் தரிசனம் ஏழ்மையின் அவலத்தில் பிறந்தும், **M. A.** பட்டம் பெற்றவருக்கு நாட்டுத் தலைமையை அளிக்க முன்வந்த பொழுது அல்பம் அவசரப்பட்டு செயல்பட்டு இழந்தது. இழந்த பின்னும் அவருள்ள அகில இந்திய முக்கிய ஸ்தாபனத்தில் முதற்பதவியை “க்ஷணத்தில்” உவந்தளித்த பொழுது அல்ப குணம் அல்ப சுபாவமாகி விலகியது. பெருந்தன்மை, நல்ல மனிதன், நாணயஸ்தன், தவறியும் தவறறியாதவன் என்பவர்களை வீடு தோறும் காண முடியாவிட்டால் ஊரில் ஒரு சிலரைக் காணலாம். அவர்களிடம், தவறு வரும் பொழுது “எந்த ஆதாயத்திற்காகவும் நான் இந்தக் காரியத்தைச் செய்ய மாட்டேன்” என்பர். அவர்கள் நாட்டின் உச்சிக்கும், உலகத்தின் சிகரத்திற்கும், யோகத்தின் முழுமைக்கும் எட்டத் தவறியதில்லை. பெரும் சாதனை உயரத்தில் முழுமை பெற்று பூரணம் பெற வேண்டிய நேரம் தேவைப்பட்ட பெருநெறிகள் யோகத்திற்கு மட்டும் உரியவை. பெருநெறிகளில்லாவிட்டாலும், இருக்கக் கூடாத சிறுநெறிகளில் அல்பம் முதன்மையானது. அல்பம் பொய்யில்லாமல் உயிர்வாழ முடியாது. அக்காரணத்தால் முழுச் சத்தியம் தவற்றை அனுமதிக்காது எனக் காண்கிறோம். அல்பத்தின் ஆர்வம் அடுத்தவரை அழிக்கும் வேகத்துடன் எழுந்து தன்னை மட்டும் தரைமட்டமாக்குவதில் குறியாக செயல்படும் என்பதை “ஞான”மாக அறிய கூர்ந்த பார்வையும், நிதானமான பொறுமையும், மனம் நிறைந்த நல்லெண்ணமும் தேவை. **Mother**, அன்னை, பகவான், ஸ்ரீ அரவிந்தர் என்ற சொற்களுக்குரிய பவர் அது.